

# மறை ஞானப்பேழை

சத்தியம் வந்துவிட்டது !

அசத்தியம் அழிந்து விட்டது !

நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும் !

**May 2025 மே 2025**

Retail Selling Price 25
Page 1

Volume - 17, Issue - 3

# வெளிவந்துவிட்டது!

நாம் மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்த

**அல் – இக்துத் தரார்ரீ ஃபீ ஷரஹிஸ்**

# ஸஹீஹி லில் இமாமில் புகாரீ

(முதல் பாகம்)




சங்கைமிகு குத்புல் ஃபரீத்,

**ஜமாலிய்யா அஸ்ஸையித்**

**யாஸீன் மௌலானா (ரலி)**

அவர்கள் அறபு மொழியில் ஆக்கியது.

**விலை ரூ. 1000/ – மட்டும் – (கொரியர் செலவு தனி.)**

**தொடர்புக்கு : 99437 86269 - 99445 76165**

## மறைஞானப் பேழை சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்நாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 300/- |
| வெளிநாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 3000 /- |

**சந்தாத் தொகை அனுப்ப, முகவரி மாற்றம், மற்ற விபரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய கை பேசி எண்கள்.**

**Cell : 9597912410 - 9944576165**

## விளம்பரக்கட்டணம்

| | ரூபாய் |
|---|---|
| முழுப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 1000 |
| முழுப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 10000 |
| அரைப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 600 |
| அரைப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 5000 |
| கால் பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 500 |
| கால் பக்கம் (ஆண்டு முழுவதும்) | 4000 |

# Be in all and get the power of God

## ஆன்மிக மாத இதழ்

**வெளியிடுவோர்**
அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை
பாகிரா காம்ப்ளக்ஸ்74, பழனிரோடு.
திண்டுக்கல் - 624 001.

**நிறுவனர்**
குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜூத், ஜமாலிய்யா
அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா
நாயகம் அவர்கள்.

**ஆசிரியர்**
கலீஃபா. S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ

**சிறப்பாசிரியர்**
கலீஃபா. A.N.M. லியாகத் அலி, B.Sc., B.L.,

**வெளியீட்டாளர்**
J. முஹம்மது ரஹ்மத்துல்லாஹ், B.A.,B.Com.,

**அச்சிட்டோர்**
R. விஜயலட்சுமி
ஸ்ரீ அக்னி அம்மன் அச்சகம்,
52, பழனிரோடு, திண்டுக்கல்.

**கணினி அச்சுக் கோவை**
ரிப்தா கம்ப்யூட்டர்ஸ் செல்: 99445 76165



செய்திகள் அனுப்பவேண்டிய முகவரி

**S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ**
**(கலீல் கம்ப்யூட்டர் கல்வி மையம்)**
13. எம்.ஆர்.ஆர். நகர்
திண்டுக்கல் - 624 002.
CELL : 99445 76165
Website:www.emsabai.org
email: aalimpulavar07@ gmail.com
email: j.mdrahmathulla@yahoo.com
https:www.emsmedia.net
https:www.awniyyabookstore.com
https:www.yaseenrali.com


# மறை ஞானப் பேழை


ஷவ்வால் –துல்கஃதா

**மே 2025**

**Volume - 17 Issue 3**


## பேழைக்குள்......


ஜமாலிய்யா தோட்டத்தில் கொய்த மலர்.
திருமறைப் பக்கம்.
அமுத மொழிகள்.
உமர் (ரலி) புராணம் – நயம்.
சம்பைவழி சந்தனமே.
அன்னை பாத்திமா (ரலி)
இலங்கையின் பொதிகை.
காலத்தின் உத்தமர்.
இந்தியாவின் முதல் பல் மருத்துவர்.
அறிவும் ஆன்மிகமும் சந்திக்கும்...
நாங்கள் கண்ட சந்நிதானம்.
செய்கு நாயகங்களின் உதயதின விழா.
மியான்மர் அழிவு.
திருமுல்லைப் பூவே.
கலிமா விருட்சக் கனிகள்
மற்றும் செய்திகள்!

# முரீதுகள் வாழ்க! வளர்க!

சங்கைமிகு செய்கு நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்கள் 50 ஆண்டுகளுக்கு முன்னர் சொன்னார்கள்; நாம் தௌஹீதின் புதிய சமுதாயத்தை உருவாக்குவோம் என்று. அவர்கள் அருளியது போலவே இறையை அறிந்த – எம்பெருமானாரை உண்மையாக நேசிக்கும் ஒரு புதிய தியாகக் கூட்டத்தை உருவாக்கிவிட்டார்கள்.

அவர்களின் முரீதுப்பிள்ளைகள் தங்கள் செய்கு நாயகம் அவர்களின் உபதேசங்களை இதயத்தில் தாங்கி உலாவருகின்றார்கள்.

அவர்கள் தொடங்கிய மதுரஸா வளர்ச்சியடைய வேண்டும், அங்கு கல்வி கற்க ஏராளமானோர் வரவேண்டும், அங்கு ஓதும் மாணவச் செல்வங்கள் எந்த சிரமமுமின்றி ஈருலகக் கல்வியும் கற்று முழுமையான மார்க்கஅறிஞர்களாக மலரவேண்டும் என்ற லட்சியத்தில் தங்களின் நேரங்களை முழுமையாகப் பயன்படுத்தி நன்கொடைகள் பெற்று வளர்ச்சிக்கு உதவுவதோடு தங்களின் ஜகாத் நன்கொடைகளையும் தாராளமாக அளிக்கின்றனர்.

அதே போல நமது தரீக்காவின் அத்தியாவசிய நிகழ்ச்சிகளான மாதக்கூட்டம், ராதிப், மவ்லிது, புர்தா, பதுரு மவ்லிது மஜ்லிஸ், அனைத்திலும் ஆர்வத்துடன் பங்கு கொண்டு கடமையாற்றி வருகின்றார்கள்,

மேலும், சங்கைமிகு வாப்பா நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்களின் தர்ஹா கட்டடநிதியாக, தங்களின் சக்திக்கு உட்பட்டும், சக்திக்கு மேலும் நன்கொடைகளை வாரி வழங்கி வருன்றனர்.

அதேபோல வாப்பா நாயகம் அவர்களின் வழிகாட்டலின்படி ஏழைக் குமர்களின் திருமணம் அரங்கேறவும், வசதியற்ற நோயாளிகளின் வைத்தியச் செலவுகளையும் ஏற்று அவர்கள் நோய் நீங்கி வாழவும் பொருள் தியாகம் புரிகின்றனர்.

மேலும், பாத்திமா நாயகியார் விழா, பதுருஸஹாபாக்கள் விழா, மீலாது விழா, அத்துடன் சங்கைமிகு செய்கு நாயகங்களின் உதயதின விழாக்களை பொருட்செலவு பாராமல் கொண்டாடி மகிழ்கின்றனர்.

மேலும் அவர்கள் அடையாளம் காட்டிச் சென்ற சையிதுனா யாஸீன் அலி நாயத்தை உச்சியில் வைத்துப் போற்றி வருகின்றனர்.

இவை அனைத்திலும் ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் சிறப்பாக விளங்குகின்றனர் என்பது பெருமைக்குரிய விஷயமாகும் .

இந்த நற்செயல்களெல்லாம் ஒரு சமூகம் உயிர்ப்போடு இருப்பதற்கு அடையாளமாகும். அல்லாஹ் நம்மை உயிர்ப்போடு வாழவைப்பானாக!

*மறைஞானப் பேழை நிறுவனர்*

**அஷ்ஷைகுல் காமில்**

**குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத்**

**ஜமாலிய்யா**

# அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மௌலானா

**அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள்**



*திருக்குர்ஆனுக்கு பல்லாயிரக்கணக்காண விரிவுரைகள் பல மொழிகளிலும் வெளிவந்துள்ளன. இன்னும் சிலர் பல புதுமுறைகளையும் கையாளத் தொடுத்துள்ளார்கள். கருத்து மறைந்துள்ள சில குர்ஆன் வாக்கியங்களுக்கு அப்படி அப்படியே பொருள் கூறப்பட்டுள்ளமையால் உண்மை விளக்கம் மறைந்து போகிறது. பொருத்தமற்ற கருத்து வெளியாகிறது. இதனால் இஸ்லாத்தில் குளறுபடி உண்டாகிறது. இவையெல்லாம் நீக்கப்பட்டே விரிவுரை எழுதல் வேண்டும்.*

*தப்ஸீர் முன்னுரையில்.....*

***- சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் -***

# ஜமாலிய்யா தோட்டத்தில்

■ (நான் என் காலத்தின் அநாதியான நித்திய சீவனாவேன். நீர் எவ்வாறு எமது இடத்தில் சீவியராக உள்ளீரோ, அதுபோல.

எமக்கு மனித சமுதாயங்களுக்குள்ள பணிகள் ஏராளம் உண்டு. அந்தப் பணிகளுக்கு நிச்சயமாக நீர் எமக்கு உயிரோட்டமாவீர்.

ஓ அப்துல் கரீமே நீர் சீவியவந்தர். இந்தச் சூழலில் நிச்சயமாக நீர் எமது பாதுகாவலில் உள்ளீர்.)

நம் உயிரினும் மேலான குத்புஸ்ஸமான் வாப்பா நாயகம் அவர்கள் தங்கள் கலீபா. எஸ்.அப்துல் கரீமவர்களின் ஆயுளை நீடித்து அருளிய அரபுக் கவி. தமிழாக்கம் அடியேனுடையது. (டாக்டர் அஷ்ரப் அலி ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள்)

*(குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸைய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல் ஹஸனிய்யில் ஹுஸைனிய்யில் ஹாஷிமிய்யி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் வாப்பா நாயகம் அவர்கள் தங்கள் கலீபா அல்ஹாஜ்,எஸ்.அப்துல் கரீம் (ஜமாலி) அவர்களுக்கு எழுதிய 29/07/1968 பட்டோலையிலிருந்து)*

■ முஹம்மதிய்ய குடும்பத்தில் உதிக்கும் மகான்களுக்கு இடைவேளைகளோ வெற்றுக் காலங்களோ இல்லை. முஹம்மதிய்ய மகான்கள் சங்கிலித் தொடர்போன்று ஒன்றோடு ஒன்று பின்னப்பட்டே இருப்பர். இப்படியான ஆயத்தங்களை முன்வந்த மகான்களே ஏற்படுத்திவந்தார்கள். இவர்களை இவர்களே அறிவர். இத்தொடர்புகள் அர்வாஹுடைய ஆலத்திலே பதிப்பிக்கப்பட்டன. அவற்றையே முன்வந்த மகான்கள் அறிந்து அவர் அவர்களை ஆயத்தம் பண்ணிவந்தனர். அவ்வாறே இன்றுவரை நடந்துகொண்டிருக்கிறது. முஹம்மதிய்யத் தோன்றல்களில் ஹக்கில் ஹக்கான தோன்றல்கள் பெரும் தரங்களை அடைகின்றனர். ஏனைய தோன்றல்களைவிட இத்தோன்றல்களுக்கு உயரிய பிரத்தியேகமான ஒளிபொருந்திய பெருமிடம் உண்டு.

*குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸைய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல் ஹஸனிய்யில் ஹுஸைனிய்யில் ஹாஷிமிய்யி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் சங்கைக்குரிய நமது வாப்பா நாயகமவர்கள் கலீபா. எஸ். அப்துல் கரீம் (ஜமாலி) அவர்களுக்கு எழுதிய 05.04.1966 பட்டோலையிலிருந்து.*



## கொய்த மலர்

# மொழி பெயர்ப்புகளின் மகுடம்

(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் மொழி பெயர்ப்பு.)

وَلِلّٰهِ الْمَشْرِقُ وَالْمَغْرِبُ

கிழக்கும் மேற்கும் அல்லாஹுவுக்குரியன.

فَاَيْنَمَا تُوَلُّوْا فَثَمَّ وَجْهُ اللّٰهِ

ஆகலான் நீங்கள் எப்பக்கம் திரும்பினும் அங்கே அல்லாஹுவின் திக்கே (தாற்பரியமே) உள்ளது.

اِنَّ اللّٰهَ وَاسِعٌ عَلِيْمٌ ١١٥

நிச்சயமாக அல்லாஹு (எதையும் செய்ய) இயன்றவன் – சக்தியாளன். (பரந்து) விரிந்த (இடையீடின்றிய விசாலத்தன், விராவிக்கலந்தவன்) வியாபகன். மிக்க ஞானி. (மிக அறிந்தவன்.)

(28) وَقَالُوا اتَّخَذَ اللّٰهُ وَلَدًا ۙ سُبْحٰنَهٗ

இறைவன் சந்ததிகளைப் பெற்றுள்ளான் என்று அவர்கள் கூறினார்கள். (இறைவனோ பிள்ளைகள் பெற்றுச் சந்ததிகளை உண்டுபண்ணுதலை விட்டும்) பரிசுத்தமானவன். உருவற்ற வருவாய் வியாபித்த இறைவனுக்கு ஏனோ சந்ததி? பிரபஞ்சமனைத்தும் அவனினன்றோ!

بَلْ لَّهٗ مَا فِى السَّمٰوٰتِ وَالْاَرْضِ

எனினும் வானம் பூமிகளிலுள்ளவை எல்லாம் அவனுக்கே உரியன.

كُلٌّ لَّهٗ قٰنِتُوْنَ ١١٦

அனைத்தும் அவனுக்கே வணக்கம் செலுத்துகின்றன.

بَدِيْعُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ

வானங்களையும்பூமியையும் நூதனமாய் (தன்னில்தானே) உண்டு பண்ணியவன்.

وَاِذَا قَضٰٓى اَمۡرًا فَاِنَّمَا يَقُوۡلُ لَهٗ كُنۡ فَيَكُوۡنُ ۝ ١١٧

ஒருசெயலை நிறைவேற்ற இறைவன் விரும்பினால் எவ்வாறாயினும் அதற்கு ஆகு எனக் கூறிடின் அப்படியே (அக்கணமே) அது ஆகிவிடும்.

وَقَالَ الَّذِيۡنَ لَا يَعۡلَمُوۡنَ

அறியாத (அறிவிலிகள்) சொன்னார்கள்.

لَوۡلَا يُكَلِّمُنَا اللّٰهُ اَوۡ تَاۡتِيۡنَآ اٰيَةٌ

அல்லாஹ் நம்முடன் பேசவேண்டாமா? அல்லது (நாயகப் பெருந்தகை நபியென்பதற்கான) ஓர் அத்தாட்சியையாவது – ஓர் அடையாளத்தையாவது நமக்கு அருள வேண்டாமா? (அப்படியிருப்பின் நாம் நிச்சயம் ஈமான் கொண்டிருப்போம்.)

كَذٰلِكَ قَالَ الَّذِيۡنَ مِنۡ قَبۡلِهِمۡ مِّثۡلَ قَوۡلِهِمۡ‌ؕ

இது போன்றே, அவர்களுக்கு முன்னிருந்தார்களே அவர்களும் அவர்களுடைய சொற்போன்றே சொன்னார்கள். (கேட்டார்கள்) .

تَشَابَهَتۡ قُلُوۡبُهُمۡ‌ؕ

அவர்களுடைய இருதயங்களும் இவர்களுடைய இருதயங்களும் ஒன்றை யொன்று ஒத்திருக்கின்றன.

قَدۡ بَيَّنَّا الۡاٰيٰتِ لِقَوۡمٍ يُّوۡقِنُوۡنَ ۝ ١١٨

(சந்தேகமின்றி) நிச்சயிக்கும் கூட்டத்தாருக்கு நம் அத்தாட்சிகளைத் திட்டமாகவே தெளிவு படுத்தியுள்ளோம்.

---

(ஆ.கா. அப்துல் ஹமீது பாக்கவி அவர்களின் மொழிபெயர்ப்பு)

115. கிழக்குதிசையும் மேற்குதிசையும் அல்லாஹுவுக்கே (உரியன.) ஆதலால் நீங்கள் எத்திசையை நோக்கினும் அங்கு அல்லாஹ்வின் முகம் இருக்கிறது. நிச்சயமாக அல்லாஹ் விசாலமானவன். மிக அறிந்தவன்.

116. அல்லாஹ் (தனக்கு) சந்ததி ஏற்படுத்திக் கொண்டான் என்றும் கூறுகின்றனர். அவ்வாறல்ல. அவனோ மிக்க பரிசுத்தமானவன். வானங்களிலும் பூமியிலும் உள்ளவை அனைத்தும் அவனுக்குரியனவே. இவை அனைத்தும் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றனவே தவிர சந்ததியாக ஆகக்கூடிய தகுதியில் எந்த ஒன்றுமே இல்லை.

117. அவனே வானங்களையும் பூமியையும் முன்மாதிரியின்றியே படைத்தவன். அவன் ஒரு காரியத்தை முடிவு செய்துவிட்டால் அதை ஆகுக எனக் கூறிய மாத்திரத்தில் உடனே அது ஆகிவிடும்.

118. மேலும் கல்வி (அறிவு) இல்லாதோர் அல்லாஹ் நம்முடன் (நேரிடியாகப்) பேசவேண்டாமா? அல்லது (எழுதப்பட்ட) ஒரு வசனம் (நேராக) நமக்கு வரவேண்டாமா? எனக் கேட்கின்றனர். இவர்கள் கேட்டது போன்றே இவர்களுக்கு முன்னிருந்தவர்களும் (மூஸாவிடம்) கேட்டார்கள். (அவர்களுடைய உள்ளங்களை) இவர்களுடைய உள்ளங்கள் ஒத்திருக்கின்றன. (உண்மையை) நம்பிக்கை கொள்ளும் மக்களுக்கு நம் அத்தாட்சிகளை நிச்சயமாக நாம் தெளிவாக்கி இருக்கிறோம்.

## நபிமொழிகள்

♦ சாப்பிட்டுவிட்டு (அல்லாஹ்வுக்கு) நன்றி செலுத்தக்கூடியவர் (எந்தத் தவறுகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல்) பொறுமை காத்து, நோன்பு நோற்றவரைப் போன்றவராவார். (ஹள்ரத் அபூஹுரைரா (ரலி), திர்மிதீ – 2486)

♦ பெருமானார் அவர்களிடம் ஈமான் என்றால் என்னவென்று கேட்கப்பட்ட போது, (எதிலும்) பொறுமையை கடைபிடிப்பதும்,(எல்லோரிடமும்) மென்மையாய் நடந்துகொள்வதும் தான் (ஈமான்) என்று பதிலளித்தார்கள்.

(ஹள்ரத் அம்ர் (ரலி), அஹ்மத் 4/385)

♦ பெருமானார் (ஸல்) உரைத்தார்கள்: விரைவில் ஒரு காலம் வரும். அப்போது மக்களில் சிறந்தவர்கள் (இந்த உலகை விட்டும்) அகற்றப்பட்டு இழிவானவர்கள் மட்டும் எஞ்சியிருப்பார்கள். அவர்களுடைய உடன்படிக்கைகளும் அமானிதங்களும் (அவர்களின் அக்கரையின்மையால்) சீர்கெட்டு, கருத்து வேறுபாடும் கொள்வார்கள் என்று கூறி, நபி (ஸல்) அவர்கள் தம்முடைய விரல்களைக் கோர்த்து, அவர்கள் இவ்வாறு (நல்லவருக்கும் தீயவருக்கும் வித்தியாசம் இல்லாமல்) இருப்பார்கள் என்று கூறினார்கள்.

♦ அல்லாஹ்வின் தூதரே! அப்போது நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், நீங்கள் (எதை உண்மை என்று) அறிந்துள்ளீர்களோ அதை எடுத்துக் கொண்டு, (எதை பொய்யென்று) மறுக்கிறீர்களோ அதை விட்டு விடுங்கள். பொதுமக்களின் காரியங்களை விட்டு விட்டு உங்களுக்கு நெருங்கியவர்களின் விஷயத்தில் ஈடுபடுங்கள்.

# திருக்குறள்

**சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்**

**தாங்காது மன்னோ பொறை (990)**

பலகுணங்களாலும் நிறைந்தவரும் தம் தன்மைகளில் குன்றுவார்களானால் இந்தப் பெரிய பூமி தானும் தன் பாரத்தைத் தாங்காததாய் அழிந்துபோகும்.

**கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்றுங்**
**குருத்திற் கரும்புதின் றற்றே;- குருத்திற்**
**கெதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ, என்றும்**
**மதுர மிலாளர் தொடர்பு.**

(பொருள்.) கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை எஞ்ஞான்றும் குருத்தின்கரும்பு தின்றற்று – கல்வியின் பயன் தெரிந்துஉரிய நூல்களைக் கற்றுத் தெளிந்த மேலோருடைய நட்பு எஞ்ஞான்றும் குருத்திலிருந்து கரும்புதின்றாற் போன்றது; குருத்திற்கு எதிர்செலத்தின்றன்ன தகைத்து என்றும் மதுரம் இலாளர்தொடர்பு – கல்வியின் இனிமையில்லாத கீழோருடையதொடர்பு என்றும் கரும்பை அதன் குருத்திற்கு நேரேசெல்லும்படி அடியிலிருந்து தின்று சென்றாற்போன்றதன்மையுடையது.1

(கு–து.) கற்றார் நட்பு மேன்மேலும்இன்பம் தந்து செல்லும்.

## இரு மாதச் சிறப்பு தினங்கள்

**பிறை**

شَوَّال

**ஷவ்வால்**

1 ஈதுப் பெருநாள்

3 புகாரி தங்கள் கந்தூரி

16. **சங்கைமிகு ஜமாலிய்யா அஸ்ஸெய்யிது கலீல் அவ்ன் மௌலனா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் உதயம்.**

25. ஹைதராபாத் அப்துல் காதிர் ஸூஃபி ஹள்ரத் உரூஸ்

ذِي القعدة

**துல்கஃதா**

17. திருமுல்லைவாசல் யாஸீன் மௌலானா (ரலி) கந்தூரி.

23 ஏர்வாடி சையிது இப்றாஹீம் ஷஹீது (ரலி) கந்தூரி

சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்களின்

# அமுத மொழிகள்



## அறிவின் அறிவே அண்ணலார் தானே!

குழந்தைப் பிள்ளைகளுக்கு எல்லா விஷயங்களையும் விளங்கச் சொல்லிக் கொடுக்க வேண்டும். ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் ஹக் ஆக இருக்கிறார்கள். இன்று ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களின் வார்த்தைகளை விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்கிறார்கள். ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் இன்ஜினீயருக்கு இன்ஜினீயர்.

ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் வாழ்வில் எத்தனைப் பணிகள் செய்திருக்கிறார்கள். பள்ளிகள் கட்டினார்கள். அவர்கள் விருப்பப்படிதானே கட்டினார்கள்? கட்டுமானத்தில் இன்ஜினீயரிங்தானே அது? ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றி வரையறுத்துக்கூற முடியாது. அப்படியிருக்கிற நேரத்தில், ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்று அலிஃப், பே கூடத் தெரியாதவன் சொல்கிறான் என்றால், எவ்வளவு பெரிய வெட்கக்கேடாக இருக்கிறது பாருங்கள்!

பிள்ளைகள் அனைவரும் நல்ல விளக்கங்களைப் பெற்று, ஒழுங்கான சுன்னத் வல் ஜமாஅத்தில் இருப்பதற்கும், நல்ல அறிவுடையவர்களாக இருப்பதற்கும், ஷரீஅத்தைப் பின்பற்றுபவர்களாக இருப்பதற்கும், வஹ்ததுல் வுஜுதை இன்னதென்று அறிந்து அதை நல்ல முறையில் விளங்கிக் கொள்வதற்கும், அதைப் போல், உங்கள் குடும்பத்தில் எல்லாரும் ஒற்றுமையுடன் சந்தோஷமாக இருப்பதற்கும், ஆபத்துக்கள், துன்பங்கள், கஷ்டங்கள், கொடிய நோய்கள், உயிர் கொல்லக் கூடிய நோய்கள் எதுவுமே உங்கள் யாரையுமே அண்டாது இருப்பதற்கும்,

நீங்கள் பாபங்கள் எதுவும் செய்யாமல் நல்லவர்களாக வாழ்வதற்கும், உங்கள் நிறைந்த பரக்கத்தை அல்லாஹ் கொடுப்பதற்கும், இந்த சபையை வளர்க்கக்கூடிய எண்ணம் கொண்டவர்களாக இருப்பதற்கும் அல்லாஹ் சிறப்பித்து மேன்மையாக்கி வைப்பானாக. சந்தோஷமாக்கி வைப்பானாக. ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அடர்ந்த தாடி வைத்திருந்தார்கள் என்றால், வயிறு வரை வைத்திருந்தார்கள் என்று பொருளல்ல. ஒருகைப்பிடி அளவுதான் வைத்திருந்தார்கள். ஆனால், அந்தளவு தாடி அடர்த்தியாக இருந்தது. அதில்லாமல் அவ்வளவு தூரம் வைத்திருந்தார்கள் என்று சொல்ல முடியாது.

வீட்டிற்குள்ளிருந்தே ஞானம் தேடுவது எவ்வளவோ நல்லது. எல்லா வேலைகளையும் செய்து கொண்டு ஞானியாக இருப்பது எவ்வளவோ சிறந்தது. ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிகுதமான காலம் அப்படித் தானே இருந்தார்கள். தனிமையாகச் சென்று இருந்தது கொஞ்ச காலம் தான்.

ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஸ்தபா, முக்தார் ஆக இருக்கிறார்கள். தெரிந்தெடுக்கப்பட்டவர்கள், தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். அவர்கள் பிறக்கும்போதே அப்படித்தானே இருந்தார்கள். இல்லையென்றால் கிஸ்ரா கோட்டை இடிந்து விழுமா? அல்லாஹ்வால் தெரிந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதால் தானே அப்படி நடந்தது. ஆகவே, ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குத் தவம் தேவை என்ற வகையில் சிந்திக்க ஒன்றுமில்லை. ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பூரணமாகச் சிந்தித்தால் போதும்.

மனதில் இருக்கும் எண்ணங்கள் பிரபஞ்சம் முழுக்கத் தெரிய வேண்டும் என்ற அவசியம் இல்லையே? அது அது எங்கெங்கே பதிவாக வேண்டுமோ, அங்கங்கே பதிவாகிறது. பிரபஞ்சம் முழுக்கவும் பதிவாகிறது என்பதில்லை. எண்ணங்கள் மனதில் பதிவாகின்றன. அவருடைய ரூஹில் அப்படியே பதிவு செய்யப்படுகின்றன. இறந்தபிறகு அந்த எண்ணங்கள் தாம் நிலைத்திருக்கும். ஆத்மாவுக்கு வரும் சோதனைகள், கப்ரில் நடக்கும் வேதனைகளும் அதற்கு உண்டாகும். ஏனென்றால், ரூஹுக்கும் உடலுக்கும் பிரிவில்லையே? உடலில் முக்கியமானது ரூஹ்.

ஆத்மா சாந்தியடையக்கூடிய வேலையை நாம் செய்ய வேண்டும். எப்போதும் பலவகையான எண்ணங்களை எண்ணிக் கொண்டும், ஹயவானியத்துடைய எண்ணங்களை வைத்துக்கொண்டும் இருக்கக்கூடாது. அவ்வப்போது தோன்றும் எண்ணங்களை அப்படி அப்படியே மறந்து போக வேண்டும். இல்லையெனில், அந்த எண்ணங்களே பதிந்து விடும்.

எது நேர்ந்தாலும் அல்லாஹ்வால் விதிக்கப்பட்டது என்று நாங்கள் பொறுத்துக் கொள்வோம் என்றும் எல்லாம் நன்மைக்கே என்றும் ஸூஃபியாக்கள் எண்ணம் கொண்டிருப்பார்கள். எல்லாம் நன்மைக்கு என்று எண்ணும்போது இந்தப் பிரச்சனையே வரப்போவதில்லை. அதிகமாக அதைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியமும் இல்லை. ஒருசிலர் அதைச் சிந்தித்துக் கொண்டே இருக்கிறார்கள்.

நல்ல செயல்களைச் செய்துவரவேண்டும். மார்க்கத்திற்கு ஏற்றமாதிரி நடந்து கொள்ள வேண்டும். தவ்ஹீதுடைய இல்மும் இருக்க வேண்டும்.

எவ்வளவு உயர்ந்தவராக இருந்தாலும் சரி, எவ்வளவு படித்தவராக இருந்தாலும் சரி ஞான அறிவுக்கு மேலில்லை. ஞானம் படித்தவர்களுக்கு அல்லாஹ் உங்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பான். ஏனென்றால், அதன்மூலம் அல்லாஹ்வுடன் சம்பந்தம் உண்டாகிறதல்லவா? தொடர்பு ஏற்படுகிறதல்லவா?

எங்களுடைய பிள்ளைகளின் விஷயத்தில் பாதுகாப்புக்கு அல்லாஹ்வுடைய கிருபையைக் கொண்டு நாங்கள் இருக்கிறோம். எல்லா வகையிலும் பாதுகாப்புக்கு இருக்கிறோம். இல்லையென்றால், உங்களை நாங்கள் எப்படி முரீது என்று சொல்ல முடியும்? நீங்களெல்லாம் எங்களின் முரீதுகளாய் இருக்கிறீர்கள் தாமே? எங்களின் பாதுகாப்பு உங்களுக்கு எப்பவும் இருக்கும். எங்களுடைய பாதுகாப்பு மட்டுமல்ல, குத்பு நாயகம் (ரலியல்லாஹுஅன்ஹு) அவர்களுடைய – ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய பாதுகாப்பும் இருக்கும்.

எங்களை உதவிக்கு அழைக்கும் நேரத்தில், சிலசமயங்களில் எங்களின் வாப்பா நாயகத்தின் (தந்தை நாயகம் ரலியல்லாஹுஅன்ஹுஅவர்களின்) உதவியும் கிடைக்கும். எங்களைக் கூப்பிடுகிற நேரத்தில் குத்பு நாயகம் (ரலியல்லாஹுஅன்ஹு) அவர்களின் உதவியும் வந்து சேர இயலும். எங்களின் பெயரைக் கூப்பிடுகிற நேரத்தில், எங்களின் தரீகாவில் கைப்பிடித்த அத்தனைபேரின் உதவியும் வந்து சேர இயலும்.

நீங்கள் உதவி தேடி அழைக்கின்ற போது, மற்ற பெயரில் வருவதாக இருந்தாலும் அது நாம்தான் வருவோம். இதைத் தெரியாத சில முட்டாள்கள் கண்டதைக் கத்திக் கொண்டிருக்கிறார்கள், தற்பெருமைக்காரர்கள். அதாவது, இல்லாதவர்களை (மறைந்தவர்களை) இருக்கின்றவர்களில் காணுங்கள் என்று சொல்கிறோம். இதை உணராமல் குழப்பம் செய்கிறார்கள். எங்கள் முரீதுப் பிள்ளைகள் எல்லோருக்குமே ஆத்மசாந்தி இருக்கின்றது. சாந்தியோடுதான் இருக்கிறீர்கள். சமாதானமாக இருக்க வேண்டும். சிறப்பாக இருக்க வேண்டும்.

# உமர் ரலி புராணம்

*(நேரிசை வெண்பா)*

**ஆய்குழையார் வெம்ப வருநுதலின் முத்தம்போல்**
**தோய்ந்திடுமே வேர்வையும் தூசுதனில் - ஓய்ந்திடுவர்**
**ஆக்கை வலிகுன்றி சேக்கை குறுகுவரே**
**தாக்குற்றார் போலுமே தாம்.**

**பொருள் :**

பெண்கள் சூட்டினால் வெதும்ப அதனால் அவர்களின் அருமையான நெற்றிகளின் முத்தம் போன்ற வேர்வை வடிதலினால் ஆடைகளிற் றோய்ந்திடும். இதனால் நாரியர் சோர்ந்திடுவர். மிக்க வேர்வை உடலிலிருந்து வடிவதனால் தாந் தாக்குற்றார் போலும் உடல் வலிமை குன்றிப் படுக்கைக்குச் செல்வர்.

ஆய்குழையார்: ஆராய்ந்து தெரிந்தெடுத்த காதணிகளை அணிந்த மாதர். வெம்ப: வெதும்ப. அரு: அருமையான. நுதல்: நெற்றி. முத்தம்: முத்து. முத்துப் போன்ற வியர்வு. தூசு: உடை. ஓய்தல்: சோர்தல். ஆக்கை: உடம்பு. சேக்கை: படுக்கை, கட்டில். குறுகல்: செல்தல், அணுகல்.

பெண்களை மெல்லியலாள் என்றும் மெல்லினம் என்றும் தமிழ் இலக்கியம் பேசும். இஸ்லாம் மார்க்கமும் அவர்களை மென்மையானவர்களாகவே அணுகுகிறது. அவர்களுக்கு வணக்கக் கடமைகளில் சலுகை காட்டுகிறது. அவர்கள் உடலால் மட்டுமல்ல மனதாலும் பலம் குன்றியவர்களே.

அத்தகு பெண்கள் வெயில் காலத்தில் பாலை வெயிலில் அதன் வெப்பச் சூட்டினால் அவர்களின் பிறைபோன்ற நெற்றிகளில் முத்துமுத்தாய் வியர்வை வெளிப்பட்டு வழிந்து அவர்கள் அணிந்திருக்கும் ஆடையை நனைத்துவிடும். இதனால் மகளிர் யாரோ அடித்ததுபோல உடல் சோர்ந்து, அயர்ந்துபோய் இயங்கமுடியாமல் படுத்து உறங்கலாமே என படுக்கச் சென்று விடுவார்கள். (நம்முடைய பேச்சு வழக்கில் என்னமாய் வெயில் அடிக்கிறது என்கிறோமல்லவா?)

முரீதுகளின் அனுபவக்கூற்று.

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

கடந்த வெள்ளிக்கிழமை (11.04.2025) அன்று இரவு ஒரு கனவு கண்டேன்.

கனவில் பெண்கள் ஒவ்வொருவராக உம்ராவுடைய கடமைகளை வரிசையாக நிறைவேற்றினார்கள். நானும் அந்த வரிசையில் இருந்து உம்ரா செதேன். அங்கு அதீத அமைதியை உணர்ந்தேன். வெகுநேரம் கண்மணி நாயகம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அமர்ந்து ஜியாரத் செய்து கொண்டிருந்தேன். உள்ளே நிறைய சம்பிரதாயங்கள் நடந்துகொண்டிருந்தன. அவை என்ன என்பது எனக்கு விளங்கவில்லை. வெளியே மக்கள் அதிக அளவில் நடமாடிக் கொண்டிருந்தார்கள். மக்கள் நடமாடும் சப்தம் கேட்டது. கண்மணி நாயகம் முஹம்மது ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இடத்திலிருந்து நமது சங்கைமிகு இளைய வாப்பா நாயகம் அவர்கள் நடந்து வந்தார்கள். (நமது இளைய வாப்பா நாயகம்  அவர்கள் நடந்து வந்தார்கள்.) நமது இளைய வாப்பா நாயகம் அவர்கள்தான் கண்மணி நாயகம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்  என்பதை உணர்ந்து கனவிலிருந்து எழுந்து கண்விழித்தேன்.

இப்படிக்கு,

ஜவ்ஜது முஹம்மது யாக்கூப் இப்னு ஜமால் மைதீன் பாக்கவி– திண்டுக்கல்.

தன் மனைவி கண்ட இந்தக் கனவை சங்கைமிகு யாஸீன்அலி நாயகம் அவர்களிடம் எத்திவைத்தபோது அவர்கள் பதிவுசெய்து அனுப்பிய **பஷாரத்.**

**நாம் இந்த ஜமானில் குத்பாகவும் இரட்சகராகவும் உள்ளோம். எங்களை நிச்சயம் கொண்டவர்கண்மணி நாயகம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நிச்சயம் கொண்டவர். மேலும் இவர்கள் நாயகத்தின் (ஸல்) தலீல் என்னும் அத்தாட்சியை பூரணத்தில் விளக்கம்கொண்டவர்.**

**பரிபூரண ஆசிகள் உண்டாகட்டும்!**

---

**சீதபேதி**

மலை வாழைப்பழத்தை நல்லெண்ணையில் சேர்த்துச் சாப்பிட சீதபேதி குணமாகும்.

**பித்த வெடிப்பு**

கண்டங்கத்திரி இலைசாறை ஆலிவ் எண்ணையில் காய்ச்சி பூசி வந்தால் பித்த வெடிப்பு குணமாகும்.

# *சம்பை வழி சந்தனமே!*

கலீபா. ஆலிம் புலவர் – எஸ். ஹுஸைன் முஹம்மது ஹக்கிய்யுல் காதிரிய்யுல் –
மன்பயீ– திண்டுக்கல்

அண்ணல் நபி வாரிசுகள் அகிலத்திலே அங்குமிங்கும்
கண்ணிரண்டும் அவர்களையே காண்பதற்கு ஏங்குமம்மா
கண்டவர்கள் அவர்களையே கைப்பிடித்தால் மோட்சமுண்டு
கைப்பிடிக்க ஏற்றவர்கள் கலீல் நாதர் வாரிசம்மா

சங்கைகளின் சங்கமமே
சம்பைவழி சந்தனமே
பூரணத்தின் பூரணமே
யாஸீன் அலி நாயகமே (சங்கை)

பைத்துல் பரக்காவிலே பரக்கத்தாக பிறந்தீரே
காலத்தின் உத்தமரின் கண்காணிப்பில் வளர்ந்தீரே
நான்காம் வயதில் திருமறை முடித்து நஹ்வு ஸர்பு அறபியும் படித்து
மெய்ஞ்ஞானக் கல்வியோடு விஞ்ஞானமும் படித்து
தன்ஞானம் தனக்குள்ளே தானாய் வளர வளர்ந்தீரே (சங்கை)

வாப்பாவின் புன்சிரிப்பைப் பேரரிடம் பார்க்கின்றோம்
வாப்பாவின் பொற்குணங்கள் பூத்து நிற்கக் காண்கின்றோம்
அடக்கம் பணிவு அறிவின் வீச்சு நடக்கும் நடையில் நாயகத் தெளிவு
தௌஹீதின் வாசம் தங்கள் வார்த்தை பொங்கி வழிகிறதே
கலிமாவின் பூக்கள் பூத்து கருத்தையெல்லாம் ஈர்க்கிறதே (சங்கை)

ஆயிர மாயிரமாய் சீடர் தங்கள் அணியினிலே
அவ்ன் நாதர் பிள்ளையெல்லாம் தங்கள் பிள்ளை ஆயினரே
ஏகத்வ ஞானம் நிலைபெற வேண்டும் தரீக்கா என்றும் தழைத்திட வேண்டும்
சுன்னத் ஜமாஅத்தாரைத் தாங்க வந்த சையிதே
தன்னையறிய வந்தோர் தாகம் போக்கும் கை யிதே (சங்கை)

***இசை: செண்பகமே செண்பகமே தென்பொதிகைச் சந்தனமே!***




# தில்லுராம் – அலி கவ்ஸர்

அன்பிற்கும் பாராட்டிற்கும் உரிய இறைதூதர் எனும் கவிதைகளை இயற்றிய ஒரு இந்துக் கவிஞர். தில்லு ராமின் இந்த கவிதைகள் இஸ்லாமியர்கள் மட்டுமின்றி அனைவரும் கொண்டாடும் வகையில் இருந்தது.

அதுமட்டுமின்றி ரசூலுல்லாஹ் அவர்களின் மீது அவருக்கு உண்டான பற்றும் அதிகரித்துக் கொண்டே இருந்தது இதைக் கண்ட சிலர் நீங்கள் இந்துவாக இருந்து கொண்டு நபிகள் நாயகம் அவர்களைப் புகழ்வது இந்து மதத்தை அவமரியாதை செய்வது போல் உள்ளது என்று கேள்வி எழுப்பினார்

அதற்கு அவர் : என்னை நிறுத்தாதீர் நான் காதலால் கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டேன்! என்று அவருக்கும் நாயகம் ரசூலுல்லாஹி அவர்களுக்கும் உண்டான காதலை விவரித்தார்.

**நபிகளாரை காதலிக்க முஸ்லிமாக இருக்க வேண்டிய தேவை இல்லை இந்துவாகவும் இருக்கலாம் என்றார்.**

பின்னர் தன் வாழ்வின் இறுதி காலத்தில் மிகவும் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையில் இருந்த போது அவரது மோசமான உடல்நிலையை குறித்த செய்தி இந்தியா முழுவதும் இதழ்கள் மற்றும் செய்தி தாள்கள் மூலமாக பரவியது.

தனது இறுதி நொடிகளில் தன் மீது அக்கறை கொண்டவர்கள் சுற்றி நிற்க கதவையே பார்த்துக் கொண்டிருந்தவர் சற்று நேரத்தில் தன் கைகளைக் கட்டியவாறு எழுந்து நின்று தன்னோடு இருப்பவர்களையும் எழுந்து நிற்கச் சொன்னார்.

உடன் இருந்தவர்கள் என்ன ஆயிற்று என்று வியப்புடன் கேட்டனர் அதற்கு தில்லு அவர்கள் கண்ணீர் நிறைந்த கண்களோடு

என் ஒட்டுமொத்த வாழ்க்கையை யாருடைய புகழைப் பாட செலவு செய்தேனோ அவர் வருகை தந்துள்ளார்!

அன்னை ஃபாத்திமாவின் அன்புத் தந்தை இதோ இங்கு வருகை தந்துள்ளார்.

நான் அவரின் மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும்

பெருந்தன்மை கொண்ட பெருமானார் ரசூலுல்லாஹி அவர்கள் வருகை தந்துள்ளார் என்று கூறி மீண்டும் அழத் தொடங்கினார்.

பின்னர் அவர் இறக்கும் தருவாயில் நாயகம் ரசூலுல்லாஹி அவர்களைக் கண்டு அவர்களின் கரத்தைப் பற்றி இஸ்லாத்தை ஏற்றதாகவும் நபியவர்களால் அலி கவ்ஸர் என்று பெயர் பெற்றதாகவும் கூறப்படுகிறது.

# எச்சரிக்கை !

இஸ்லாமிய மக்களுக்கு எதிரான அடக்குமுறைகள் கொஞ்சம் கொஞ்சமாக தீவிரப் படுத்தப்பட்டு வருகிறது. பல இலட்சம் கோடி ஊழல்களில் மற்றவர்கள் ஈடுபட்டாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இல்லை. ஆனால் இஸ்லாமிய சமூகம் சில இலட்சங்கள் முறையாக கணக்கு வைக்க தவறினாலும் அவர்களை சட்டத்தின் பிடியில் சிக்க வைக்க வழி இருக்கிறதா? என்று தேடுகிறார்கள்.

காவல் நிலையங்கள் முதல் நீதிமன்றங்கள் வரை இஸ்லாமிய இளைஞர்கள் மீது கொடுக்கப்படும் புகார்கள் மட்டும் விரைவாக பரிசீலிக்கப் படுகின்றன. இஸ்லாமிய வெறுப்புணர்வு என்பது காவல்துறையில் துவங்கி ஊடகங்கள் மற்றும் நீதித்துறை வரை பரவியிருக்கிறது. இஸ்லாமிய சமூகம் மிக மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டிய கால சூழ்நிலை உருவாகியிருக்கிறது. வழிபாட்டுத் தலங்கள் முதல் குடியிருப்பு வீடுகள் வரை இஸ்லாமிய மக்கள் முறையான ஆவணங்களைப் பராமரித்து பாதுகாத்து வைக்கவேண்டியது அவசியம். வியாபாரிகள் தொழில் அதிபர்கள் தங்களுடைய வரவு செலவு கணக்குகளை ஆடிட்டர் மூலமாக முறையாக பராமரித்து வங்கி கணக்குகளை முறையாகப் பராமரித்து பாதுகாத்து வைத்துகொள்ளுங்கள்.

இஸ்லாமியப் பெண்கள்– குழந்தைகள் மிக மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சமூக வலைதளங்களில் முன்பின் தெரியாத நபர்களிடம் பேசுவதும் பழகுவதும் தொடர்பு வைத்து கொள்வதும் பிட்காயின் போன்றவற்றில் முதலீடு செய்வதும் ஆபத்தான ஒன்று என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

மதரசாக்களை நடத்துபவர்கள் அந்த மதராசக்களை அறக்கட்டளைகளாக பதிவு செய்து கொள்ளுங்கள்.தமிழகத்தில் இருக்கும் அனைத்து மதரசாக்களையும் கட்டுப்படுத்தவும் பாதுகாப்பாக செயல்படுத்தவும் ஒவ்வோர் ஊரிலும் இஸ்லாமிய மக்களால் நடத்தப்படும் அடிப்படை சுகாதார மையம் உருவாக்கப்பட்டு பெண்கள் குழந்தைகளுக்கான மருத்துவ உதவி செய்ய முன் வருவோம். ஒவ்வொரு ஊரிலும் இருக்கும் வக்ஃபு சொத்துகளில் குடியிருப்பு வீடுகளைக் கட்டி வீடில்லாத ஏழைகளுக்கு குறைந்த வாடகையில் குடியிருப்பு வீடுகளை ஏற்பாடு செய்து கொடுப்போம். ஒவ்வொரு ஊரிலும் பைத்துல்மால் ஒன்று உருவாக்கப்பட்டு வருடம் வருடம் இஸ்லாமிய மக்களிடம் இருந்து பெறப்படும் ஜக்காத் தொகை விரயமாகாமல் அந்தந்த வருடமே ஏழைகளுக்கு போய்ச் சேர ஏற்பாடு செய்வோம். *(நலம் விரும்பி)*

# அன்னை ஃபாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் ஈகை குணம்...!!

ஜாபிர்இப்னுஅப்துல்லாஹ் அன்சாரி ரலியல்லாஹு அன்ஹு சொல்கிறார்கள்:

ஒரு நாள் மாலை நேரம் அஸர் தொழுகைக்குப் பிறகு நாங்கள் நபிகளார் ஹபீப் சந்நிதானத்தில் அமர்ந்திருந்தோம்,

அப்பொழுது, வயோதிகர் ஒருவர் அழுக்குப் படிந்த ஆடையோடு அங்கு வந்தார். முதுமையின் பலவீனம் காரணமாக அவரால் ஒழுங்காக அமரக் கூட முடியவில்லை.

நபிகளார் ஹபீப் அவரிடம் சுக நலம் விசாரித்தார்கள். அதற்கு வயோதிகர்,

அல்லாஹ்வின் தூதரே, நான் பசியோடு இருக்கின்றேன். எனக்கு ஏதும் உணவு தாருங்கள். ஆடையின்றி இருக்கிறேன். உடுக்க ஏதும் கொடுத்து விடுங்கள். ஏழை, எதுவுமற்ற பரம ஏழை. ஏதாவது கொடுத்து உதவுங்கள்என முறையிடலானார்.

உமக்குத் தருவதற்கு என்னிடம் தற்போதைக்கு எதுவும் கிடையாது. ஆகையால் எதுவும் தரக் கூடிய ஒருவரிடம் அனுப்பி வைக்கிறேன் எனக் கூறி, ஹள்ரத் பிலால் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடன் அவரை ஃபாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள்.

அன்னை ஃபாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் வீட்டு வாசலுக்கு வந்த வயோதிகர் உரத்த குரலில்:

நபிகளாரின் குடும்பத்தினரே, மலக்குமார் வந்து போகும் வீட்டைச் சேர்ந்தோரே, வஹீ இறங்குகின்ற இடத்தில் உள்ளோரே உங்கள் மீது ஸலாம் உண்டாகட்டும் என்றார்....!!

அன்னையும் அவரது சலாத்துக்குப் பதில் சொல்லி சுகம் விசாரித்தார்கள்..!

அன்னையே, நான் ஒரு பரம ஏழை. தங்கள் தந்தையிடம் உதவி கோரி வந்தேன்.

தங்களிடம் என்னை அனுப்பி வைத்தார்கள். ஒழுங்கான உணவின்றி ஆடையின்றி வறுமையில் ரொம்பவும் வாடுகிறேன்...

ஏதும் இருந்தால் கொடுத்து உதவுங்கள். இறைவன் தங்களுக்குக் கருணை புரிவான் என்றார் வயோதிகர்...!!

அன்றைய தினம் அன்னை ஃபாத்திமா ரலியல்லாஹு அன்ஹாவும் ஹள்ரத் அலீ ரலியல்லாஹு அன்ஹுவும் அண்ணல் நபிகளாரும் ஒழுங்காக உணவு உட்கொண்டு மூன்று நாட்களாகியிருந்தது.

நபிகளாரும் இதனை அறிந்தே இருந்தார்கள். அன்னையார், வீட்டில் ஒரு முறை சுற்றிப் பார்த்தார். சிறுவர்களான ஹஸனும் ஹுஸைனும் (ரலியல்லாஹு அன்ஹும்) இரவில் தூங்குவதற்குப் பயன்படுத்திய பதனிடப்பட்ட ஆட்டுத் தோல் மட்டுமே கிடைத்தது....!!

அதனைப் பரிவோடு வயோதியரிடம் கொடுத்து விட்டு அவருக்காகப் பிரார்த்தித்தார்கள்.

ஆயினும் வயோதிகரோ,

நபிகளாரின் புத்திரியே, என் கஷ்டங்களை தங்களிடம் சமர்ப்பித்தேன். இந்த ஆட்டுத் தோலால் நான் என்ன தான் செய்ய முடியும்? எனக் கூறினார்...!!

அதனைச் செவிமடுத்த அன்னை, தமது கழுத்தில் அணிந்திருந்த மாலையைக் கையில் எடுத்தார். அது ஹஸ்ரத் ஹம்ஸா ரலியல்லாஹு அன்ஹுவின் மகள் பாத்திமா அன்பளிப்பாக அன்னையாருக்கு வழங்கியிருந்தார்கள்.

அதனை அந்த மனிதரிடம் கொடுத்து, இதனை விற்று உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும். இதனை விடச் சிறந்த ஒன்றை அல்லாஹ் உமக்குத் தரப் பிரார்த்திக்கிறேன் எனக் கூறி அனுப்பி வைத்தார்கள்...!!

மஸ்ஜிதுன்னபவிக்கு மீண்டு வந்த வயோதியர் நபிகளாரிடம் நடந்தவற்றை விளக்கிச் சொன்னார்.

நபிகளார் ஹபீப் அவர்கள் கண்கள் பனித்தன. மாதர்க்கரசி ஃபாத்திமாவின் கொடையல்லவா, நிச்சயமாக அல்லாஹ் உமது தேவைகளை மிகச் சிறப்பாக நிறைவேற்றி வைப்பான் என அண்ணலார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவருக்கு வாழ்த்துக் கூறினார்கள்.

அங்கு பிரசன்னமாகியிருந்த அம்மார் பின் யாசிர் ரலியல்லாஹு அன்ஹு தாமே அம் மாலையை விலை கொடுத்து வாங்க நபிகளாரின் அனுமதியைக் கோரி நின்றார்.

அதற்கு கண்மணி நபிகளார் ஹபீப் அம்மாரே அதனை வாங்கிக் கொள். ஏனெனில் அதில் சம்பந்தப்படுகின்ற எவரையும் அல்லாஹ் நரகத்தில் வேதனை செய்ய மாட்டான் என்றார்கள்...!!

அம்மனிதரும், எனது பசியைப் போக்க கோதுமையும் இறைச்சியும் உடுப்பதற்கும் தொழுகைக்குமாக ஒரு யெமன் தேசத்து ஆடையும் வீடு சென்றடைவதற்கு வழிச் செலவும் கிடைத்தால் போதுமானது, இதனை விற்று விடுவேன் என்றார்.

கைபர் யுத்தத்தில் கனீமத் கிடைத்ததில் ஓரளவு பணம் அம்மார் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இடம் இருந்தது.

இந்த மாலைக்குப் பகரமாக 20 பொற்காசுகளும் 200 வெள்ளிக் காசுகளும் போதிய அளவு கோதுமையும் இறைச்சியும் பயணம் செய்வதற்காக ஓர் ஒட்டகையும் தருகின்றேன் என்றார் அம்மார் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்,,,

எவ்வளவு பெருந்தன்மையான மனிதர் நீங்கள் என்று வியந்த வயோதிகர் அம்மாருடன் கடை வீதி நோக்கிச் சென்றார்...!

வாக்களித்த பிரகாரம் பொருட்களை அம்மனிதருக்கு வாங்கிக் கொடுத்தார் அம்மார் ரலியல்லாஹு அன்ஹு...!

மீண்டும் கண்மணி நபியவர்களிடம் வந்த வயோதிகரிடம் உமது தேவைகள் நிறைவேறி விட்டனவா எனக் கேட்டார்கள் நபிகளார் ஹபீப் அவர்கள்....,,

என் தந்தையும் தாயும் தங்களுக்கு அர்ப்பணமாகட்டும். நிறைவேறி விட்டன நாயகமே என்றார் வயோதிகர்.

அப்படியாயின் உமக்குச் செய்த உதவிக்காக ஃபாத்திமாவுக்காக துஆச் செய்யுங்கள் என நபிகளார் கோர,

இறைவா,இது வரைக்கும் எந்தக் கண்ணும் காணாத, எந்தக் காதும் கேளாத நற்பேறுகளை ஃபாத்திமாவுக்கு வழங்குவாயாக எனப் பிரார்த்தித்தார்...!!

கண்மணி நபிகளார் ஹபீப் ஆமீன் சொன்னார்கள்.

பின்னர் தம்மோடு அமர்ந்திருந்தவர்களிடம் ஃபாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் சிறப்புகளை விளக்கிக் கூறலானார்கள்...!!

கபுறில் இரண்டு மலக்குகள் தோன்றி கேள்வி கணக்கு கேட்கும் போது, உமது நபி யார்? என்று கேட்டால், எனது தந்தை என்று கூறுவார்கள்....!!

எனது அருமை மகள் ஃபாத்திமாவுக்கென்று இன்னும் தனிச்சிறப்பு நிறைய இருக்கிறது.,,, என்றெல்லாம் நபியவர்கள் விவரிக்கலானார்கள்...!!

வீட்டுக்கு வந்த அம்மார் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்,,,,

மாலையை கஸ்தூரியில் துவைத்தெடுத்து யமனிய துணியில் சுற்றினார்...!!

பின்னர் தமது அடிமையிடம் அதனைக் கொடுத்து, இதனைக் கொண்டு சென்று கண்மணி நபிகள் பெருமானிடம் கையளித்து விடு.,,,,

உம்மையும் அவர்களுக்கே உரிமையாக்கிவிட்டேன் எனக் கூறி அனுப்பினார்கள்...!!

நபிகளார் ஹபீப் அவர்கள் இடம் மாலையைக் கொடுத்து விடயத்தைச் சொன்னார் அடிமை.

இதை அப்படியே கொண்டு சென்று ஃபாத்திமாவிடமே கையளிப்பீராக. நீயும் அவருக்கே சொந்தம் என ஃபாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் இடமே அனுப்பி வைத்தார்கள் அண்ணலார்...!!

நமது சுவனத்தின் பேரரசி அன்னை ஃபாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் வீட்டுக்குச் சென்றார் அடிமை. மாலையைப் பெற்றுக் கொண்ட அன்னையார், அடிமையை விடுதலை செய்து விட்டார்கள்.

அடிமையின் முகத்தில் சிரிப்புத் தோன்றியது. காரணத்தைக் கேட்டார்கள் அன்னையார்....!!

அடிமை சொன்னார்., அன்னையே, இந்த மாலையின் பரக்கத்தை எண்ணி நான் சிரிக்கலானேன்.,, இது ஒரு ஏழையின் தேவைகளை நிறைவேற்றியது,,, பசியாளிக்கு உணவு வழங்கியது...,,

ஆடையில்லாதவனுக்கு ஆடை வழங்கியது. ஓர் அடிமையை விடுதலை செய்தது....,,,

இறுதியில் அதன் சொந்தக் காரரின் கைகளுக்கே திரும்பி வந்துள்ளது...!!

*(நூல்;அன்னை ஃபாத்திமா வாழ்க்கை வரலாறு)*

---

மூச்சுப்பிடிப்பு

சூடம், சுக்கு, சாம்பிராணி, பெருங்காயம் இவைகளை சம அளவு எடுத்து சேர்த்து வடித்த கஞ்சியில் கலக்கி மறுபடியும் சூடுபடுத்தி மூச்சுப்பிடிப்பு உள்ள இடத்தில் மூன்று வேளை தடவினால் குணமாகும்.

بسم الله الرحمن الرحيم

ஸல்லல்லாஹு அலா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

சங்கைக்குரிய குத்புல் அக்தாப் ஜமாலிய்யா அஸ்ஸய்யிது

# யாஸீன் மௌலானா (ரலி)

அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகமவர்களின்

# 61 ஆம் வருட கந்தூரி விழா அழைப்பிதழ் !

பேரன்புடையீர்! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

பரிசுத்த ஹக்கின் அவதார சந்நிதானமும், ஈருலக ரட்சகர் முஹம்மது முஸ்தஃபா ரசூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உள்ரங்க வெளிரங்க வாரிசும் கௌதுல் அஉளம் முஹிய்யுத்தீன் ஆண்டகை (ரலி) அவர்களின் சம்பூரணப் பிரதிநிதியும் காலத்தின் இமாமும் ஆத்ம ஞான குருநாதருமான குத்புல் அக்தாப் ஜமாலிய்யா அஸ்ஸய்யிது யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் (ரலி) அவர்களின் 61ஆம் வருடக் கந்தூரி விழா ஹிஜ்ரி 1446 துல்கஃதா பிறை 7 (05.05.2025) திங்கட்கிழமை மாலை செவ்வாய்க்கிழமை இரவு திருமுல்லைவாசல் மௌலானா நாயகம் (ரலி) அவர்களின் தர்ஹா ஷரீஃபில் இன்ஷா அல்லாஹ் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, துல்கஃதா பிறை 17 (15.05.2025) வியாழக்கிழமை மாலை வெள்ளிக்கிழமை இரவு கந்தூரி விழா புனித ராத்திபு மஜ்லிஸ் மற்றும் விசேஷ நிகழ்ச்சிகளுடன் சிறப்பாக நிறைவு பெறவிருப்பதால் முரீதுகள், பக்தர்கள் அனைவரும் தவறாமல் புனிதக் கந்தூரி வைபவத்தில் கலந்து கொண்டு, மௌலானா நாயகம் (ரலி) அவர்களின் அருளையும், ஆசியையும் பெற்று ஈருலக நற்பேறுகளையும் அடைந்து கொள்ளக் கோருகிறோம். வஸ்ஸலாம்.

**வாரிசுகள், கலீஃபாக்கள், முரீதுகள் சார்பாக**

**கலீஃபா. ஆலிம் புலவர் S.ஹுசைன் முஹம்மது**

**ஹக்கிய்யுல் காதிரிய்யுல் மன்பயீ**

# காலத்தின் உத்தமர்

-சங்கைமிகு. செய்யிது அலி மௌலானா -திருமுல்லைவாசல் (கேம்ப், துபை)

அன்பின் உருவாய், அறிவின் விருட்சமாய், ஞானத்தின் உச்சமாய், கேள்விகளுக்கு விடையாய், குழப்பங்களுக்குத் தீர்வாய், நோய்களுக்கு அருமருந்தாய், எங்களின் வாழ்வாய், வளமாய், நலமாய், எல்லாமுமாய், நித்திய ஜீவியம் பெற்று வாழ்ந்துகொண்டிருக்கின்ற உள்ளமைச் சூரியன் எங்களின் சங்கைமிகு ஷெய்கு நாயகம் அவர்களைப் போற்றுவதில் பெருமையடைகின்றோம்.

சங்கைமிகு ஷெய்கு நாயகமவர்களின் தீர்க்கதரிசனமிக்க வாக்கு "இந்த நூற்றாண்டிற்கும் நாமே உள்ளோம். இனிவரும் நூற்றாண்டுகளும் எம்முடைய பார்வையிலேயே நடைபெறும். இந்த ஸமானில் எம்மை அண்டியவர்கள் ஜெயம் பெற்றார்கள். எம்மை விட்டுவிட்டோர் கைசேதமடைந்தவர். எம்மைப் போன்ற ஒருவர் இனி தோன்ற மாட்டார். இதுவே ஹக்கின் பஷாரத் ஆகும்." என்று திருவாய் மலர்ந்துள்ளார்கள்.

ஞானப்பாட்டையில் தேட்டங்கொள்ளும் ஒரு முஸ்லிம் பைஅத்தை வேறு செய்குமாரிடத்தும் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் ஒப்பாரும் மிக்காரும் இல்லா காலத்தின் உத்தமர் அவர்களிடத்து பைஅத் கிடைக்கப்பெற்றது அல்லாஹ் நமக்கு வழங்கிய நிஃமத்துகளில் மிக உயர்வானது.

ஆதம் (அலை) அவர்கள் தொடங்கி கண்மணியாம் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வரை இன்னும் அந்த நபிமார்களின் தாத்பரியங்களைத் தாங்கி வந்து கொண்டிருக்கிறது அனைத்து குத்புமார்கள், வலீமார்கள் எடுத்தோதிய ஒரே உள்ளமை (வஹ்ததுல் உஜூத்) எனும் பரிபூரண தவ்ஹீத் ஞானத்தை பரிபூரணமான நமது ஷெய்கு நாயமவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றது மிகப்பெரும் பாக்கியம்.

நாம் ஒரு முறை சங்கைமிகு ஷெய்குநாயகம் அவர்களிடத்தில், நாயகமே, நாங்கள், எங்கள் பாட்டனார்களான கண்மணி முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்), முஹிய்யுத்தீன் அப்துல்காதிர் ஜீலானி (ரலி) அவர்கள், ஜமாலிய்யா அப்பா (ரலி) அவர்கள், யாஸீன் நாயகம் (ரலி) அவர்கள் ஆகியோர்களை நேரில் கண்டதில்லை. அவர்களின் வாழ்க்கையை, நற்பண்புகளை வரலாற்றில்தான் படித்திருக்கிறோம். ஆனால் அன்னவர்கள் அனைவரையும் அவர்களின் வாழ்வையும், நற்பண்புகளையும் தங்களிலே காணமுடிகிறது நாயகமே, என்றவுடன் மறைந்தவர்களை எம்மில் காணுங்கள் எனும் அவர்களின் திருமொழியை நிரூபிக்கும் வகையில் புன்னகைத்து ஆமோதித்தார்கள். சங்கைமிகு செய்கு நாயகம் ஒருமுறை நவின்றார்கள் : இந்தக்காலத்தில் இப்னு அரபி (ரலி) அவர்கள்

வாழ்வார்களேயானால் எம் இல்லம் தேடி வந்து எம்மை மரியாதை செய்து விட்டுப்போவார்கள் – இரண்டு காரணங்களுக்காக. ஒன்று நாம் அஹ்லுல் பைத் (ரஸூலுல்லாஹ் ஸல் அவர்களின் திருக்குடும்பம்) என்பதற்காவும் மற்றொன்று எமது ஞானத்தின் உச்சம் என்றார்கள்.

ஷெய்குநாயகம் சொல்லாதுதான் ஏது என்று கேட்கும்வண்ணம் (எம்மைத்தேட்டம் கொள்வோர்க்கு பதிலாகினோமே) எல்லாவற்றுக்கும் விடையாக இருக்கிறார்கள். குழப்பமான காலக்கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் அவர்களைத் தவிர வேறு யாரிடத்தில் தீர்வு கேட்டாலும் குழப்பமான பதில்தான் வரும். அதாவது சரியானதொரு தீர்வு கிடைக்காது. ஆனால் சங்கைமிகு ஷெய்குநாயகம் அவர்கள் சமூகம் சமர்ப்பித்துவிட்டால் அவர்களின் திருவாய் மலர்வதே விதியாகிவிடும்.

**தானே தன்னில் தானானான்**

ஷிர்க் எனும் பெரிய பாபம் சேராமல் சீரிய தவ்ஹீதில் ஈமானைத் தந்தவர்கள் எங்கள் சங்கைமிகு ஷெய்குநாயகம் அவர்கள்...

எங்கும் நிறைந்தவன் இறைவன் என்று வாயால் சொல்லிவிட்டு எங்கோ எதுவாகவோ இறைவனை கற்பனைசெய்து (ஷிர்க் செய்து) பாபக்கடலில் மூழ்கிக் கொண்டிருப்பவர்களுக்கு மத்தியில் நமக்கு லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்கிற கலிமாவின் விளக்கத்தை சொல்லித்தந்து விளக்கத்தின் படி ரஸூல் (ஸல்) அவர்களை உள்ளார நேசம் கொள்வதில்தான் மோட்சம் இருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்தி, தன்ஸீஹ் (மறைவானது) தஷ்பீஹ் (வெளியானது) இரண்டும் நீக்கமற கலந்து தன்ஸீஹ் மஹ்ல் என்பதே ஹக்கு என்ற பரிபூரணத்தை பரிபூரணமாகச் சொல்லி ஹக்கு எவ்வாறு படைப்புகளில் வெளியாகி யிருக்கிறான், பரந்துவிரிந்து எங்கும் நிறைந்து இருக்கிறான் என்பதை அழகுற எங்களுக்குக் கற்றுத்தந்து தன்னை அறிந்து தன் இறைவனை அறிவதே நம் படைப்பின் நோக்கம் என்பதை நமக்கு ஞானமாகத் தந்தவர்கள் சற்குரு நாயகம் அவர்கள்.

தூய தவ்ஹீதை (வஹ்ததுல் வுஜூத்) மக்களுக்கு எடுத்தோதி நேர்வழிப்படுத்த தங்களுடைய வாழ்வை அர்ப்பணித்த அனைத்து நபிமார்கள், குத்புமார்கள், வலீமார்கள், நல்லோர்கள் அனைவரையும் நினைவுபடுத்துவது மாத்திரமல்ல, அந்த சீதேவிகளின் வரலாற்றை அடுத்துவரும் சந்ததிகளுக்கு எடுத்தோதுவது ஒவ்வொரு முஸ்லிம்/மூமினின்கடமை என்று ஆணித்தரமாக மக்களுக்கு அறிவுறுத்தினார் கள். அவர்கள் முன்மாதிரியாக இருந்து எவ்வாறு தமது பாட்டனார் முஹம்மது (ஸல்) அவர்களின் மீலாது விழாவை உயிரோட்டமாக உள்ளன்போடு நடத்துவது போன்று அனைத்து நாதாக்களுடைய சிறப்புதினங்களை மகிழ்வோடு செய்துகாட்டி

மக்களையும் அதுபோன்று செய்வதில் ஐயம் இருக்கிறது என வழிகாட்டி யிருக்கிறார்கள். அந்த வரிசையில் தம்மீது அளப்பரிய பிரியமும் பாசமும் கொண்ட தமது பாட்டனார் மிகுந்த விலாயத்தையுடைய ஜமாலிய்யா அப்பா அவர்களுக்கு பிரமாண்டமான தர்பாரைக் கட்டி துன்யாவின் தேவைகளுக்கு ஜமாலிய்யா அப்பா அவர்களை நாடிப் பெற்றுக்கொள்ளுங்கள் என சீடர்களுக்கு அறிவுறுத்தியும் அதே போல் சங்கைக்குரிய தமது தந்தை நாயகம் அவர்களுக்கு பெரிய அளவிலான தர்பாரை ஏற்படுத்தி , ராத்திபு மௌலூதுகள் ஓதி மக்கள் தனது நாட்ட தேட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள வழிவகை செய்தது மக்களுக்குக் கிடைத்த பாக் கியமேயாகும்.

சங்கைக்குரிய செய்கு நாயகத்தின் பாரம்பரியம் கண்மணி ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிலிருந்து தூய்மையானது, மேன்மையானது என்பது நாமறிந்ததே. இதில் ஒரு அற்புதத்தைப் பார்க்க முடிகிறது. அந்தப் பாரம்பரியத்திலே தூய்மையான சங்கிலித்தொடரிலே உதிப்பவர்கள் தங்களின் உயரிய நோக்கம் வஹ்ததுல் உஜூதென்னும் தூய தௌஹீத் ஞானத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்லி நேர்வழிபடுத்துவது அதற்காக தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்திருக்கிறார்கள்

மேலும், சிறப்புமிக்க ஞான கிரந்தங்களைப்படைத்து பயனடையச் செய்கிறார்கள்.அவர்கள் அந்தக்கொள்கையில் உறுதியாக இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகளும் அந்த நோக்கத்தைக் கருவாகத் தாங்கியதாகவே பிறந்து சேவை புரிகி றது என்பது அற்புதங்களிலேயே சிறந்த அற்புதம். அதை இந்தப் புனித மிக்க பாரம்பரியத்திலேதான் காண முடியும்.

முஹிய்யுத்தீன் ஆண்டகை (ரலி) அவர்களின் ரிசாலத்துல் கௌதிய்யா எனும் அரபு நூலை தந்தை யாசீன் நாயகம் அவர்கள் சரியான மொழிபெயர்ப்புப் செய்தார்கள். அதற்கு இக்காலத்திய முஹிய்யுத்தீனியத் தத்துவமான நமது சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் விளக்கவுரை எழுதினார்கள். மூலம் அச்சு ப் பிசகாமல் மொழிபெயர்ப்பும் விளக்கவுரையும் தருவதற்கு அதே தாத்பரியததில் உள்ளவர்களால் மட்டுமே முடியும். சங்கைமிகு ஷெய்கு நாயகம் அவர்களிடம் பெற்ற அறிவுரை, அற்புதங்கள் அனுபவங்கள் பலவற்றிலிருந்து சிலவற்றை இங்கு அறியத்தருகிறோம்

சங்கைமிகு ஷெய்கு நாயகம் அவர்கள் எங்கள் குடும்பத்தவர்களை சிலாகித் துச் சொல்கிற எல்லா நேரங்களிலும் அவர்கள் எமது குடும்பம் என மிகவும் சந்தோஷமாகக் கூறுவார்கள். பாருங்களேன், பெரியவர்கள் முதல் சிறிய குழந்தைகள் வரை என்மீது உயிராக இருக்கிறார்களே என்றும், என்னையும் என் தம்பியையும் எப்பொழுதெல்லாம் பார்க்கிறார்களோ அப்பொழுதெல்லாம் தாம்

பெற்றெடுக்காத எனது இரண்டு பிள்ளைகள் என்று உரிமையோடும் உள்ளன்போடும் சொல்வார்கள். அதுவே எங்களுக்குக் கிடைத்த மிகச் சிறந்த பாக்கியம். நாங்கள் எப்பொழுதும் உங்களோடு இருக்கிறோம் என்றுச் சொல்வார்கள். சென்ற 17/01/2024 அன்று எனது மனைவி ஒரு கனவு காண்கிறார்.அதில் சங்கைக்குரிய செய்கு நாயகம் வெளியூருக்குப் புறப்படுகிறார்கள். சாமான்கள் தயாராக இருக்கிறது. அதில் ஒரு பேக் மாத்திரம் திறந்து இருக்கிறது. அதில் பார்த்தால் குடும்பத்தவர்கள் அனைவர்களின் புகைப்படங்களும் இருப்பது கண்டு எனது மனைவியின் மனம் பூரித்துப்போய், மாமா சீதேவி நம் அனைவர்களையும் அவர்கள் பாதுகாப்பில் வைத்திருக்கிறார்கள் என்கிற விளக்கம் பெற்றதாக சொல்லிக்காண்பித்தார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் நான் ஒரு கனவு கண்டேன். எமது பெற்றோர் வீட்டில் கூட்டமாக இருக்கிறது. அவர்கள் முஹிய்யுத்தீன் ஆண்டகை வந்து இருக்கிறார்கள் எனப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நான் அந்தக் கூட்டத்தினரை சற்று விலக்கிக்கொண்டு சென்று பார்க்கிறேனே். சங்கைக்குரிய செய்கு நாயகம் அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். ஆனந்தம் கொண்டேன். இது பற்றி அவர்களிடம் தெரிவித்தேன். புன்னகையுடன் ஏற்றுக்கொண்டார்கள். முஹிய்யுத்தீனியத் தத்துவமாக அவர்கள்தானே இருக்கிறார்கள்.

நாங்கள் வீடு கட்டும்போது முன்பகுதியைக் கட்டிவிட்டு பின் பகுதி கட்டுமானத்தைத் தொடங்கும்போது அது வாழை மற்றும் தென்னை மரங்கள் நிறைந்த பகுதி, ஆகவே கட்டுமான வேலையைத் தொடர முதலில் மரங்களை வெட்டியாக வேண்டும். மரத்தை வெட்ட மறுக்கிறார்கள், ஏதோ காரணத்திற்காக வாழை மரத்தை வெட்டக்கூடாது என்கிறார். சங்கைக்குரிய செய்கு நாயகத்திடம் இது விஷயம் சொன்னபோது காட்டையே அழித்து நாட்டை உருவாக்குகிறார்கள். நம்முடைய தேவைக்கு அதனை வெட்டுவதில் தவறில்லை. தைரியமாக வெட்டச்சொல்லுங்கள் என தைரியம் கொடுத்தார்கள். பிறகு அதே நபரிடத்து இது விசயம் சொல்லி வெட்டச்சொல்லும்போது வெட்டமறுத்த அதே நபர் அந்த மரங்களை வெட்டினார். கட்டடமும் அழகுற கட்டி முடிந்தது.

நாங்கள் வீடு கட்டிக்கொண்டிருக்கும் காலம் சங்கைக்குரிய செய்கு நாயகம் அவர்களைச் சந்திக்கும் நேரம் எல்லாம் மாமா, நாயகமே வீடு அலங்காரமாக வரவேண்டும் என்று கேட்பேன். அவர்களோ வீடு அழகாக வரும் என்பார்கள். பிறகு அலங்காரத்திற்கும் அழகுக்கும் உள்ள வித்தியாசத்தை யோசிக்கிறபொழுதுதான் விளங்கியது அலங்காரம் தற்காலிகமானது, ஆனால் அழகு நிரந்தரமானது என்று. சங்கைக்குரிய செய்கு நாயகம் பயன்படுததும் வார்த்தைகளுக்கு மேலாக ஒரு வார்த்தை இருக்க முடியாது.

எம் சாச்சா மர்ஹூம் செய்யிது நூருல் அமீன் மௌலானா அவர்களுக்கு இதய அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். ஆனால் அவர்களுக்கு பிளட் சுகர் லெவல் அதிகமாக இருக்கிறது. ஹைரிஸ்க் என்று குறிப்பிட்டு வந்துள்ளது. அதாவது டாக்டர் சொன்னார் ஆபரேசன் செய்தால் சில நேரம் சரி ஆகலாம் .பெய்லிர்ஆகவும் வாய்ப்புகள் இருக்கிறது என்றவுடன் சங்கைக்குரிய செய்கு நாயகம் அவர்களைத் தொடர்பு கொண்டு கேட்கப்பட்டது. அவர்கள் சொன்னார்கள் ஹைரிஸ்க். என்பது டாக்டர்கள் அப்போதுதான் அவர்கள் கவனமாகச் செய்ய வேண்டும் என்பதற்காக எழுதியுள்ளார்கள். எனவே அல்லாஹ் இருக்கிறான். ஆபரேசன் பண்ணச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். அவர்கள் வாக்கின்படி ஆபரேசன் வெற்றிகரமாக நடந்தேறி பல ஆண்டுகாலம் நல்ல ஆரோக்கியத்தோடு வாழ்ந்தார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

திருமுல்லைவாசலில் ஒரு வீடு கட்டுமான வேலை அவர்களுக்குச் சொந்தமான இடத்தில் தொடங்கிவிட்டார்கள். குறிப்பிட்ட அளவு வேலைகளும் செய்து இருந்தார்கள். அந்த வீட்டிற்கு எதிராக ஒரு சந்து இருக்கிறது. அதைக் காரணம் காட்டி ஊரில் சிலர் சந்திற்கு எதிராக வீடு அமைந்தால் விளங்காது என பயத்தை ஏற்படுத்தி யிருந்தார்கள். நடந்துகொண்டிருந்த வேலையும் நின்று போனது. அதுசமயம் சங்கைக்குரிய செய்கு நாயகம் அவர்கள் திருமுல்லைவாசல் விஜயம் செய்திருந்தார்கள். அந்த வீட்டின் தாய் எங்களிடம், வாப்பா நாயகத்தின் பாதம் எங்கள் வீடு கட்டும் இடத்தில் பட வேண்டும், தடைப்பட்டிருக்கும் வேலை நடைபெறவேண்டும் என வேண்டினார். அது எங்கள் வீட்டிற்கு அரு கில் இருக்கும் இடமாகும். சங்கைக்குரிய செய்கு நாயகம் மனமுவந்து அந்த இடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது அந்தத் தாய் நடந்த விபரங்களை சங்கைக்குரிய செய்கு நாயகம் அவர்களிடம் சொன்னார்கள். சந்திற்கு அடுத்த பக்கம் ஆறு இருப்பதாகச் சொல்கிறீர்கள். நல்ல காற்று வருமே. குழப்பத்திறகு அஞ்ச வேண்டாம். தைரியமாகக் கட்டுமானத்தைத் தொடருங்கள். என்றார்கள் இன்று அவர்கள் செழிப்பாகவே இருக்கிறார்கள். அந்த வீட்டில் உள்ள ஆண்கள் அனைவரும் பைஅத் பெற்று விட்டார்கள். நல்ல முரீதீன்களாக செயல்படுகிறார்கள்.

எனது மகன் பத்தாம் வகுப்பு படித்து பதினொன்றாம் வகுப்பு சென்னையில் ஹாஸ்டலில் தங்க வைத்து படிக்க வைக்கலாமா என்று சங்கைக்குரிய செய்கு நாயகம் அவர்களிடம் கேட்டோம். வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். பன்னிரெண்டாம் வகுப்பு முடித்தவுடன் எனது மகன் சங்கைக்குரிய செய்கு நாயகம் அவர்களிடம் அப்பா நான் போய் படிக்க ஆசையாக இருக்கிறது என்று கேட்க, நீங்களும் படிக்கணும் தானே... உங்களுக்கும் டிகிரி வேணும் தானே. அப்போ நல்ல காலேஜ்-ல் போய் சேர்ந்து படியுங்கள். ஹக்கு உங்களுக்குத் தேவையான

அனைத்து உதவிகளையும் பாதுகாப்புகளையும் அருளும் என்று திருவாக்குச் சொன்னார்கள். மாஷா அல்லாஹ் அவர் நியூகாலேஜில் நல்ல முறையில் படித்துக்கொண்டிருக்கி றார்.

சங்கைக்குரிய செய்கு நாயகம் அவர்களின் திருவாக்கின்படி ஹக்கின் புறத்திலிருந்து வரக்கூடிய உதவிகளும் பாதுகாப்புகளும் கிடைத்துக் கொண்டேயிருக்கிறது. அவர் சந்தோசமாக படித்து வருகிறார்.

நான் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை எழுதிவிட்டு அடுத்த நாள் வரவிருக்கும் ரிசல்டுக்காக மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்தேன். அன்று இரவு உறக்கத்தில் கனவு. அதில் சங்கைக்குரிய செய்கு நாயகம் அவர்கள், மார்க் சீட்டைக் காட்டி தேர்ச்சி பெற்றுவிட்டீர்கள் என்கிறார்கள். அற்புதம் அதே மார்க்ஷீட்தான் எனது நனவிலும் கிடைக்கப்பெற்றேன்.

துபையில் டிரைவிங் லைசென்ஸ் எடுப்பது எவ்வளவு சிரமம் என்பது அங்கு உள்ளவர்களுக்கு நன்குதெரியும். நானும் சிலடெஸ்டுகளில் பெய்ல் ஆகிக்கொண்டிருந்தேன். அந்தக் காலகட்டத்தில் சங்கைக்குரிய செய்கு நாயகம் அவர்கள் துபை விஜயம் செய்து இருந்தார்கள். அப்பொழுது லைசன்ஸ் கிடைக்க வேண்டினேன். பாரதியின் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே என்ற பாடல் வரிகளை முழுமையாகச் சொல்லிக்காட்டி தைரியமாகச் செய்யுங்கள் மகன் வெற்றி பெறுவீர்கள் என ஆசீர்வதித்தார்கள் . அடுத்து வந்த டெஸ்டில் பாஸ் பண்ணிவிட்டேன்.

அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்கிற வாசகத்தை சங்கைக்குரிய செய்கு நாயகம் அவர்கள் வாசித்துவிட்டு ஒரு அருமையான விளக்கத்தைச் சொன்னார்கள். தெய்வமும் அன்றே கொல்லும். காரணம் அரசனும் அந்த தெய்வப்பகுதியே என, ஹக்குக்கும் ஹல்குக்கும் உள்ளத் தொடர்பை தெளிவுபடுத்தினார்கள்.

---

**இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.**

சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் முரீது திருப்பத்தூர். ஜனாப். சௌகத் அலி ஹக்கிய்யுல் காதிரிய் (துபை) அவர்களின் அருமைத்தாயாரும் சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் முஹிப்பாவுமான சௌ.சகர்பான் பீவி அவர்கள் 21.04.2025 திங்கட்கிழமை அதிகாலை வஃபாத்தானார்கள் அன்னாரது மறுமை வாழ்வு பிரகாசமாகவும் மேன்மையாகவும் இருக்கவும் சுவனபதி அடையவும் பிரார்த்திப்போமாக அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தார் ஆறுதல் அடைவார்களாக. பொருந்திக் கொள்வார்களாக. (ஆமீன்).

அறிவோம்.

# இந்தியாவின் முதல் பல்மருத்துவர் - ரஃபியுத்தீன் அஹமத் சாஹிப்

பிரிட்டிஷ் இந்தியாவின் வங்காளத்தில் பர்தன்பூர் என்ற நகரில் பிறந்தவர் ரஃபியுத்தீன். பணம் படைத்தவர்களுக்கு உயர்கல்வி என்றிருந்த நிலையில் வங்காளத்தில் இருந்து அமேரிக்கா மாகாணத்திற்குச் சென்று அவர் பல் மருத்துவம் பயின்று முறையான பட்டம் பெற்று வந்தார்.

1915 இல் அமெரிக்கா சென்ற அவர் 1919 இல் திரும்பி வந்த பொழுது பல் மருத்துவத் துறைக்கான விழிப்புணர்வும் ஆர்வமும் அற்றவர்களாக இருந்த இந்திய இளைஞர்களை பல் மருத்துவம் பயில அழைத்தார். இதற்காக 1920இல் தனது சொந்த மாளிகை ஒன்றினை விற்று கொல்கத்தாவின் முதல் பல்மருத்துவக் கல்லூரி ஒன்றையும் நிர்மாணித்தார்.

தொடக்கத்தில் 11 மாணவர்களுடன் இயங்க ஆரம்பித்த அந்தக் கல்லூரியை நடத்துவது அவருக்கு பொருளாதார சிக்கல்களைத் தோற்றுவித்தாலும் தொடர்ந்து தனது சொந்த பணத்தைக் கொண்டே அந்த கல்லூரியை நடத்தினார். பல் மருத்துவம் பயில வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டும் என்ற கட்டாயத்தை உடைத்து இந்திய அளவிலும் பாகிஸ்தான்,சிந்து மற்றும் பர்மாவில் இருந்தும் வந்த மாணவர்களுக்கு இடமளித்த கொல்கத்தா பல்மருத்துவக் கல்லூரி இந்தியாவின் முதல் பல் மருத்துவமனை மற்றும் கல்லூரி என்ற மதிப்பினைப் பெற்று பெரும் புரட்சியினை உண்டுபண்ணியது.

தற்போது ஆயிரக்கணக்கான பல் மருத்துவர்களை உருவாக்கி வரும் அந்தக் கல்லூரி டாக்டர். அஹ்மத் டென்டல் காலேஜ் & ஆஸ்பிடலாக இருந்து பின்னர் கொல்கத்தா பல்கலைக்கழகம் என்கிற அளவுக்கு உயர்ந்து நாட்டிற்கு பெருமை தேடித் தந்துள்ளது.

1925 இல் அவரால் முதன்முதலில் இந்திய பல்மருத்துவப் பத்திரிகை துவங்கப்பட்டது. மீண்டும் பெங்கால் டென்டல் அசோசியேஷன் என அவர் உருவாக்கிய ஒரு அமைப்பு பின்னாளில் இந்திய டென்டல் அசோசியேஷனாக மாறியுள்ளது. இவரது சேவைகளை பாராட்டி இந்திய அரசு கடந்த 1964இல் இவருக்கு நாட்டின் உயரிய விருதான பத்மபூஷண் விருதினை வழங்கி கவுரவித்தது.

மௌலவி ஸைஃபுத்தீன் அஹ்மத் என்ற டெபுடி கலெக்டர் தந்தைக்கும் ஃபைஸுநிசா என்ற தாயாருக்கும் 1890 இல் பிறந்த இவருக்கு நான்கு சகோதரர்களும் ஒரு சகோதரியும் இருந்தனர். இவர் தனது ஆரம்பக் கல்வியினை டாக்கா மதரஸாவில் பயின்று பின் 1908இல் அலிகர் பல்கலையில் மேற்படிப்பு முடித்து பல்மருத்துவம் பயில அமெரிக்கா சென்றுவந்தார்.

1909 இல் இவரது தந்தை மரணத்திற்குப் பிறகு பம்பாய் நகருக்கு வந்து பின் இங்கிலாந்திற்குச் சென்று அங்கிருந்து அமெரிக்கா சென்று மருத்துவம் படிக்கச் சென்றவர் 1919இல் முதலாம் உலகப்போர் முடியும் வரை பாஸ்டனிலுள்ள ஃபோர்சித் குழந்தைகளுக்கான பல்மருத்துவமனையில் பணியாற்றியுள்ளார்.

இவர் தொடங்கிய பல் மருத்துவக்கல்லூரியில் முதல் மூன்றாண்டுகள் 11 மாணவர்கள் மட்டுமே பயின்றனர், அதில் இரு மாணவிகளில் ஒருவர் பாகிஸ்தான் தந்தை முஹம்மது அலி ஜின்னா அவர்களின் சகோதரி ஃபாத்திமா ஜின்னா ஆவார், மற்றொருவர் பாக்தாத் யூதப்பெண்ணான தபிதா சாலமன் ஆவார். யூதப் பெண்ணாக இருந்தாலும் இவருக்கு இந்திய குடியுரிமை வழங்கப்பட்டிருந்தது.

1932 இல் கொல்கத்தா மாநகராட்சியின் கவுன்சிலர் தேர்தலில் நின்ற அவர் வெற்றிபெற்று, பின்னர் 1950இல் மேற்குவங்க முதல்வர் பி.சி.ராய் அவர்களுடைய அழைப்பின் பெயரில் மேற்குவங்க வேளாண் துறை அமைச்சராகவும், சமுதாய நல முன்னேற்ற வாரியம், கூட்டுறவுத்துறை மற்றும் பேரிடர் மீட்பு மறுவாழ்வு வாரியம் ஆகியவற்றுக்கு பொறுப்பு வகித்து 1962இல் ஓய்வுபெற்றார்.

1965இல் அவர் மரணிக்கும் வரையிலும் இந்திய மாணவர்களுக்கான கட்டாய ஆரம்பக்கல்வி கிடைக்க முயற்சியெடுத்து பல பணிகளை செய்தார். இந்திய பல்மருத்துவ மாணவர்களுக்கான அறுவை சிகிச்சை கையேடு ஒன்றினை தயாரித்த இவரது சேவைகளைப் பாராட்டி இங்கிலாந்தின் ராயல் காலேஜ் ஆஃப் சர்ஜன்ஸ் மற்றும் அமெரிக்காவில் பியர் ஃபுக்கர்ட் அகாடமியின் Fellowship கொடுக்கப்பட்டு கவுரவிக்கப்பட்டது.

இவரது சேவைகளையும் பணிகளையும் பாராட்டி இன்று பல கல்லூரிகளிலும் இவரது பெயரால் மாணவர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. இந்தியாவின் நவீன பல் மருத்துவத் தந்தை எனப் போற்றப்படும் ரஃபியுத்தீன் அஹ்மது சாஹிப் அவர்களது பிறந்த தினமான டிசம்பர் 24 அன்று, இந்தியாவின் தேசிய பல்மருத்துவர் தினமாக ஆண்டுதோறும் நினைவுகூரப்படுகிறது.

# அறிவும் ஆன்மிகமும் சங்கமிக்கும் அற்புத நாதர்!

**மர்ஹூம். சங்கைமிகு அஸ்ஸய்யிது மஸ்வூது மௌலானா அல்–ஹாதி – திருமுல்லைவாசல்**

*நஹ்மதுஹூ வனு ஸல்லீ ரஸூலிஹில் கரீம்*

*அல்ஹம்து லில்லாஹில்லதீ அஜ்ரா யனாபிஅல் ஹிக்மத்தி மின் அல்ஸினத்தி அவ்லியாயிஹி.*

*புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கு உரியது. அவன் எப்படிப்பட்டவன் என்றால் ஞானம் எனும் ஊற்றை தனது நேசர்களாகிய அவ்லியாக்களுடைய நாவில் நின்றும் சாலிஹான பேர்களுடைய செவிகளில் செலுத்தி வைத்தானே அப்படிப்பட்டவன். ஸலவாத்தென்னும் கருணையும் ஸலாம் எனும் சாந்தியும் அண்ணலெம் பெருமான் அஹமது முஸ்தஃபா - மஹ்மூது முர்த்தழா முஹம்மது முஸ்தஃபா -ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களின் பரிசுத்த கிளைஞர்கள் மீதும் உண்டாவதாக. ஆமீன்.*

*வாரிதே முஸ்தஃபா நாயிபே முஹிய்யுத்தீன் ஷம்ஸுல் இர்ஃபான் குத்புல் அக்தாப் ஜமாலிய்யா அஸ்ஸைய்யித் யாஸீன் இபுனு செய்யிது முஹம்மது பக்தாதி (ரலி) அவர்களின் விஸாலுடைய 50 ஆம் ஆண்டு அவர்கள் பெயரால் வெளியிடப்படும் பொன்விழா மலரில் அவர்களின் ஆயுட்காலத்தில் நின்றும் நாம் அறிந்த சில சிறப்புகளை நினைவு கூர விரும்புகிறேன். அதற்கு இத்தருணம் நமக்கு ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது. (அல்ஹம்துலில்லாஹ்)*

*சங்கைமிகு விழா நாயகரின் பாட்டனார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய நுபுவ்வத்; அந்த நூரே முஹம்மதிய்யா எப்படி பரிசுத்தமாக்கப்பட்டு வந்து ஹஜ்ரத் அப்துல்லாஹ்- ஆமீனா (ரலி) மூலமாக வெளிப்பட்டதோ அதே போன்று நமது நாயகம் அவர்களின் விலாயத் ஹஜ்ரத் கௌதுல் அஃலம் அவர்களிலிருந்து வழிவழியாக வந்து ஜமாலிய்யா செய்யிது முஹம்மது மௌலானா செய்யிதா உம்மு ஹபீபா கண்ணே மூலமாக வெளியாகி, ஆன்மிக லௌகிக கல்விகளில் தேர்ச்சி பெற்றுத் தமது தந்தையிடமே ஆன்மிக வழி நடந்தலுக்கான தீட்சையையும் கிலாஃபத்தையும் பெற்றுள்ளார்கள்.*

அவர்கள் இந்த சமூகத்திற்கு வழங்கிய ஏகத்துவ ஞான விளக்கங்கள் நிறைந்த ஆக்கங்கள் மட்டுமல்ல; மக்கள் தமது வாழ்க்கை முறையை எப்படியெல்லாம் அமைத்துக் கொள்ள வேண்டும் என அவர்கள் வழங்கிய உபதேசங்களும் உபந்நியாசங்களும் மக்களைப் பண்படுத்தியது மட்டுமல்ல; அவர்கள் வாழ்ந்து காட்டிய வாழ்வியல் முறை கண்டு வியந்தவர்கள் அவர்களைச் சந்தித்து அறிவு பெற விரும்பினால் அவர்களின் மெய்ஞ்ஞான அறிவில் மயங்கி மலைத்துப் போவார்கள்.

எண்ணற்ற மக்களுக்கு ஞான வழிகாட்டும் காமில் குருவாக அவர்கள் திகழ்ந்தார்கள். அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்பதில் தங்கள் காலத்தில் முதல் மனிதராக விளங்கினார்கள். இஸ்லாமிய மார்க்கச் சட்டத்தில் சந்தேகங்கள், குழப்பங்கள் தலைதூக்கிய போதெல்லாம் அறிவுப் பூர்வமான கருத்துக்களால் அதனை நீக்கி இஸ்லாமிய உலகின் சீர்திருத்தச் செம்மலாக அமைந்தார்கள்.

ஹள்ரத் முஹிய்யுத்தீன் அப்துல் காதிர் ஜீலானி(ரலி) அவர்களால் சகல மக்களுக்கும் அளிக்கப்பட்ட உம்முத்தரீகாவாகிய உயர் காதிரியா தரீக்காவை உயிர்ப்பித்து தங்களுடைய காலத்தில் ஹக்கு புறத்திலிருந்து அவர்களுக்கு ஏற்பட்ட உயர்வின் நிமித்தம் அதற்கு " ஹக்கிய்யத்துல் காதிரிய்யா " எனப் பெயரிட்டார்கள். அதனால் அவர்களைப் பின்பற்றியவர்களும் நம் சமுதாய மக்களில் பல்லாயிரக்கணக்கானோரும் இன்று வரை பயன்பெற்று வருகிறார்கள்.

"சத்திய சகோதரர்களே! வாருங்கள் நம்மளவில். அஹ்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாயிலளவில் சேர்ப்பிக்கிற கயிற்றைப் பற்றிப் பிடியுங்கள்!

நம்மிலே சன்மார்க்கமும் மேன்மையும் அஹ்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களினால் இகபர இடறுகளிலிருந்து தப்புதலும் இருக்கின்றன!

நமது கூட்டமே! நம்மிடத்தில் வெற்றி இருக்கிறது. நான் அன்பு கொண்டுள்ள ஹபீபிற்குரிய மணமான ஜீவன் நிமித்தம் வாருங்கள்!" என அழைத்து ஆத்ம ஞானஅறிவுகளைப் புகட்டி அது எப்படி என அவர்களே சொல்வார்கள்.

***எனது நாவிலிருந்து ஏகத்துவ அறிவு ஷரீஅத் மார்க்க அறிவுகளுடைய சமுத்திரம்***

***அதன் முத்துக்களை கேட்கிறவனின் செவிகளில் வெளியாக்கியது.***

*அன்பர்களின் செவிகளுக்கு அது சென்றதால் அந்த சக்தி அன்பர்களின் இதயங்களுக்கு அவர்கள் அதைப் பேணியதால் ஜோதி இருந்தது. மனிதனுக்கு அவன் செய்த முயற்சியே தவிர வேறில்லை.*

*உள்ளிலும் வெளியிலும் அவர்கள் செய்த முயற்சியால் அவர்களின் இருதயங்கள் மின்னுகிற ஜ்வலிக்கிற பிரகாசத்தால் இலங்கின.*

*எனது ஆத்ம நண்பர்கள் ஒவ்வொருவர் இதயத்திலும் எனக்குக் கூடாரமிருக்கிறது. பராக்குகளால் எனது இறைவனை அவர்கள் மறந்த பொழுது அவர்களின் இதயங்களிலிருந்து நான் அவனை திக்ரு செய்கிறேன்.*

*அவர்களின் இதய பூமியிலே சத்தியமேகம் சன்மான மழையைப் பொழிந்தது. அதனால் உயர்ந்த அபூர்வ நலன்கள் கொண்டு அந்த இதயங்கள் ஜீவன் பெற்றன.*

*அவர்கள் சர்வ உலகங்களிலும் சக்ரவர்த்திகளாகவும் செல்வத்தையும் பரிசுத்த இருதயத்தையும் உடையவர்யாகவும் ஆனார்கள்.*

*என அருளுகிறார்கள்.*

*சிறந்த நாவலராகத் திகழ்ந்த அவர்கள் இலங்கை தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் பயணம் செய்து மக்கள் மனங்களை இறைவன்பால் திரும்பச் செய்துவிடும் மார்க்க உபன்யாசம் புரிந்தார்கள்.*

*1960 ஆம் ஆண்டு எனது திருமணப் பேச்சு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அதனை இறுதி செய்வதில் கால தாமதம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அந்நிலையில் திருமுல்லை வாசலில் உள்ள நாயகம் அவர்கள் இல்லத்தில் ஒரு நாள் இரவு தூக்கத்திற்கும் விழிப்பிற்கும் உள்ள நிலையில் நாகூர் ஹஜ்ரத் ஸெய்யிது அப்துல் காதிர் (ரலி) நாயகம் அவர்களின் வஸீலாவைத் தேடியவர்களாக இருக்க நாகூர் நாயகம் அங்கு பிரசன்னமாகி எம்மை விட்டு தூரமாக இருப்பதாக எண்ணுகிறீர்கள். ஆனால் நாமோ உங்களை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் எனக் கூறி மறைந்தார்கள். உடனே தமது ஃபைலை எடுத்து அதில் பாதுஷா*

நாயகத்தின் பேரில் முனஜாத்தாக பனிரெண்டு அடிகள் கொண்ட

ரிளா உ ரப்பிய அன்ஹு ௌம் மல்வரா ஸலிமூ

மின் ஷித்தத்தின் பிக்குமு யா உத்ததன் அலிமூ

யா ஷாஹே மீரான மன் கத்அம்ம ஹு ுல் கரமு

யா அப்த ரப்பின் அத்தாஹு ுல் ஜு ௌது வன்னிஅமு

என்ற பைத்தை எழுதி வைத்தார்கள். அதன்பின் எனது திருமணமும் நிகழ்ந்தது. நாகூருக்கும் திருமுல்லைவாசலுக்கும் ஏற்பட்ட சம்பந்தத்தால் ஒரு நெருக்கமும், பிறகு 1966 இல் சங்கைமிகு நாயகம் அவர்கள் வஃபாத்திற்கு பின் நாகூருக்கு அருகிலேயே திருமுல்லைவாசலில் அடக்கமானதிலிருந்து உள்ள நெருக்கம் ஆக இந்த இரண்டு நெருக்கமும் பாதுஷா நாயகம் சங்கைமிகு நாயகத்திடம் கூறியது மெய்ப்பிக்கப் பட்டுவிட்டது மட்டுமல்ல; இரண்டு வலிமார்களின் எண்ணங்களையும் ஹக்கு அப்படியே ஏற்றுக் கொண்டு செயல்படுத்தி விடுகிறது எவ்வளவு நிதர்சனமான உண்மை என்பதை இச்சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

**சொன்னால் சொன்னதுதான்!**

1960ஆம் ஆண்டு நாயகத்தின் முஹிப்பீன்களில் பரங்கிப் பேட்டையைச் சேர்ந்த ப. சுல்தான் மரைக்காயர் என்பவர் நாயகத்திடம் அடிக்கடி வந்து மார்க்க விஷய விளக்கம் அறிந்து செல்வார். அப்படி அவர் வந்த நேரத்தில் அவரிடம் நாயகம் அவர்கள் வரும் ஜு ௌலை 13. 1960 ஆம் தேதி எனது மகளாரின் திருமணம் நடக்க உள்ளது. அதில் நீங்கள் கலந்து கொள்ளுங்கள் என அழைத்துள்ளார்கள். அதற்கு அவர் “வாப்பா! ஜு ௌலை 13 ஆம் தேதி உலகம் அழிந்துவிடும் என மேல்நாட்டு விஞ்ஞானிகள் 13 பேர் கூடி ஆய்வு செய்து அறிவித்து இருக்கிறார்களே. அன்றா திருமணம் வைத்துள்ளீர்கள்?” எனக் கேட்டுள்ளார். அதற்கு நாயகம் அவர்கள் சிரித்துக் கொண்டே சொன்னார்களாம். “அன்றுதான் புது உலகம் உதயமாகப் போகிறது!” என பதில் சொல்லிவிட்டு நீங்கள் கலந்து கொள்வீர்கள் தானே! என கேட்டுள்ளார்கள். அதற்கு அவர் “வாப்பா அன்றுதான் நான் சிங்கப்பூர் செல்ல டிக்கெட் போட்டுள்ளேன். மக்கள் எல்லோரும் உலகம் அழிந்துவிடும் எனப் பேசிக் கொள்கிறார்கள்; நாயகத்திடம் கேட்க வந்த எனக்கு விடையும் விளக்கமும் கிடைத்ததால் அன்றே திட்டமிட்டபடி சிங்கை செல்ல தீர்மானித்து விட்டேன்” எனச் சொல்லி ஊர் சென்று திட்டமிட்டபடி பயணத் தேதிக்கு ஒரு நாள் முன்பே

சென்னை சென்றவருக்கு 7 நாட்கள் விமானிகள் பயண நிறுத்தம் செய்திருப்பதும் புதிய பயணச் செய்தி பிறகு அறிவிப்பதாகவும் ஏர்லைன்ஸ் நிறுவனம் தெரிவித்தது. அப்போதுதான் சட்டென நினைவுக்குவந்தது. நாயகம் வீட்டுத் திருமணம் பற்றி. சென்னையிலிருந்து நேராக திருமுல்லை வாசல் வந்து திருமணத்தில் கலந்து கொண்டார். நாயகம் அவர்கள் அவரைப் பார்த்து "நீங்கள் சிங்கப்பூர் செல்ல வில்லையா" எனக் கேட்க. "வாப்பா! இன்று நான் தங்களின் ஐன் கராமத்தை முழுமையாக உணர்ந்து கொண்டேன்" என்றார். இச்சம்பவம் விஞ்ஞானிகளை விட மெய்ஞ்ஞானிகள் மேலானவர்கள் என்பதும் அவர்கள் மக்களுக்கு தீர்க்கமான முடிவை சொல்பவர்கள் என்பதோடு வலிமார்களின் எண்ணத்தை ஹக்கு அப்படியே ஏற்றுக் கொள்ளும் என்பதும் அவர்கள் சொல்லை ஹக்கு என்றைக்குமே பொய்ப்பிக்காது என்பதையும் இச்சம்பவம் எடுத்துக் காட்டும்.

1964 இல் சங்கைமிகு நாயகம் அவர்கள் இலங்கையிலிருந்து எமக்கு எழுதிய பட்டோலையில் "நீங்கள் நாகூரில் அதிகம் தங்குவதை விட திருமுல்லைவாசலில் அதிகம் தங்குவதற்கு முயற்சி செய்யுங்கள்; ஹக்கு உங்களுக்கு அங்கு சிறப்பை வைத்திருக்கிறது" என எழுதியிருந்தார்கள். அதிகம் நாகூரில் தங்கிய நான் அந்தக் கடிதத்திற்கு பிறகு நிரந்தரமாக திருமுல்லைவாசலிலேயே தங்கும்படி சூழ்நிலை உருவாகி அங்கேயே தங்கியதன் விளைவாக இன்று வரை சங்கைமிகு நாயகம் அவர்களின் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் ஹக்கு எம்மை சிறப்பித்து வருகிறது. அந்த கடிதத்திற்குப் பிறகு என் தக்தீர் மாற்றி வைக்கப்படுவது மட்டுமல்ல. வலிமார்களின் எண்ணத்தை ஹக்கு அப்படியே ஏற்றுக் கொள்கிறது நிதர்சனமாக தெளிவுபடும்.

**வழக்கும் வக்கீலும்!**

இலங்கையில் உள்ள கண்டி முஸ்லீம் ஹோட்டல் உரிமையாளர் நாயகத்தின் முஹிப்பீன்களில் ஒருவர். நாயகம் அவர்கள் கண்டிக்குச் சென்றால் தமது ஹோட்டலுக்கு அழைத்து பல ஆத்மிக சகோதரர்களையும் அழைத்து மரியாதை செய்வது அவர் வழக்கம். அப்படி ஒருமுறை நாயகம் அவர்கள் அங்கு வந்த நேரத்தில் அவர் நாயகத்திடம் "வாப்பா! நாளை ஹோட்டலுக்கான இன்கம் டேக்ஸ் கேஸ் இறுதிக்கட்டம் உள்ளது. அதில் எங்களுக்கு வெற்றி கிடைக்க தாங்கள் துஆ செய்ய வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார். நாயகம் அவர்களும்

துஆ செய்து “உங்களுக்கு வெற்றி கிடைக்கும். அல்லாஹ்போதுமானவன்” எனச் சொல்லியுள்ளார்கள். மறுநாள் வழக்கு வந்தது. தீர்ப்போ பாதகமாக இருந்தது. நாயகம் அவர்கள் வெற்றி கிடைக்கும் எனச் சொன்னார்களே என இவருக்கு குழப்பம். இவர் மீண்டும் நாயகத்தைச் சந்தித்து நடந்ததைச் சொன்னார். அதற்கு நாயகம் அவர்கள் “எனது துஆவை ஹக்கு ஏற்றுக் கொண்டது. உங்கள் வக்கீல் வழக்கில் ஏதோ குறை செய்திருக்க வேண்டும். நீங்கள் மீண்டும் அப்பீல் செய்யுங்கள். நிச்சயமாக ஹக்கு உங்களுக்கு வெற்றியைக் கொடுக்கும்” எனச் சொல்லியுள்ளார்கள். அவர் வேறு ஒரு வக்கீலை நியமித்து அப்பீல் செய்தார். அந்த வக்கீல் வழக்கைப் பார்த்துவிட்டு வழக்கில் சில முக்கியமான அம்சங்கள் விடப் பட்டுள்ளன எனச்சொல்லி அதை வைத்து வாதாடியுள்ளார். அப்பீல் வழக்கு இவருக்குச் சாதகமாகத் தீர்ப்பானது. வலிமார்களின் சொல் பொய்யாவதில்லை என்பதும் வலிமார்களின் துஆவை ஹக்கு அப்படியே ஏற்றுக் கொள்கிறது என்பதையும் இச்சம்பவம் காட்டும் உண்மை என கண்டி முஸ்லீம் ஹோட்டலில் மேனேஜராக பணிபுரிந்த கலீபா. யாஸீன் ஆலிம் சாஹிபு அவர்கள் சொல்வார்கள்.

## இருள் உள்ளத்தில் ஒளிவிளக்கு

முஸ்லிம் லீக் பிரபல மேடைப் பேச்சாளர் இரவணசமுத்திரம் பீர்முஹம்மது. அவர் முதன் முதலாக நாயகத்தைச் சந்திக்க பேராசிரியர் முஹம்மது கனி அவர்களுடன் சென்றார். அங்கோ அன்றைய கால புகழ்பெற்ற ஆலிம்பெருமக்கள் எல்லாம் கீழே அமர்ந்திருக்க நாயகம் அவர்கள் மட்டும் ஒரு நாற்காலியில் அமர்ந்திருப்பதைக் கண்டு அவர் மனதுக்குள் நாயகம் அவர்கள் பெருமையை விரும்புபவர்களாக இருக்குமோ? என எண்ணியுள்ளார். அவரை நாயகம் அவர்கள் அதுவரை பார்த்தது இல்லை. முதன்முதலாக குறிப்பாக அவரை நாயகம் அவர்கள் பார்த்து ஒரு புன்சிரிப்பு சிரித்துவிட்டு “நீங்கள்தானே இரவண சமுத்திரம் பீர்முஹம்மது? எனக் கேட்டு விட்டு உங்களுக்கு வேண்டுமானால் ஒரு நாற்காலி போடச் சொல்லவா?” எனக் கேட்டார்களாம். கேட்டவுடன் அதிர்ந்து போன அவர், வலிமார்கள் அகப்பார்வை உடையவர்கள் என்பதை சட்டென உணர்ந்து வேண்டாம் வாப்பா!” எனச் சொல்லி அவர்கள் அருகில் சென்று கீழேயே அமர்ந்து கொண்டார். அவரைப் பார்த்து நாயகம் அவர்கள் “ஏவுகிறவர் மேலேயிருப்பார் செயல்படுகிறவர் கீழே இருப்பார்” எனச் சொல்லியுள்ளார்கள். நிலை தடுமாறிய எனக்கு மேலும் மேலும் விளக்கம்

கிடைத்துக் கொண்டே இருந்தது. சட்டென யோசித்தேன். ஏவுகிற மூளை மேலேயும்செயல்படுகிற அவயங்கள் அதற்கு கீழும், ஆசிரியர் மேலும் மாணவர்கள் கீழும் இருப்பதில்லையா? என் மனம் எனக்கு பதில் சொல்லிக் கொண்டே இருந்தது. ஒருவிதமான அச்சம் என்னை ஆட்கொண்டது. எண்ணத்தின் ஆழம் அறிந்து விளக்கம் தருபவர்கள் வலிமார்கள் என்பதை உணர்ந்து என்னை அவர்களிடம் அர்ப்பணித்தேன்.

இவ்விஷயம் திருமுல்லைவாசலில் நடைபெற்ற காஜா முயீனுத்தீன் சிஷ்தி நாயகத்தின் நினைவு தினத்தில் அவர் ஆற்றிய உரையின் சுருக்கம்.

**ஆழம் தெரியாமல்...**

தென்னிந்தியாவில் பல பள்ளிவாசல்களைத் திறப்பு விழாக்களில் கலந்துகொண்டு அதைத் திறந்து வைத்து அதை வக்ஃபும் செய்திருக்கிறார்கள். அதுபோல் சீர்காழி தாலுக்கா - கொள்ளிடம் தைக்கால் பள்ளிவாசல் திறப்புவிழாவில் கலந்து கொண்ட மௌலானா நாயகம் அவர்களிடம் காட்டு மன்னார் குடியைச் சேர்ந்த ஒரு முர்ஷித்,

**அல்லாஹ் எங்கும் இருக்கிறான் எனக் கூறுப்படுகிறதே!**

**ஒரு மர நாற்காலியைக் காட்டி, இந்த நாற்காலியில்**

**அல்லாஹ் இருக்கிறானா? எனக் கேட்டு;**

அதற்கு எப்படி பதில் சொன்னாலும் தர்க்கம் செய்து கொள்ளலாம் என எண்ணியுள்ளார். அவர் நோக்கத்தை அறிந்த நாயகம் அவர்கள்...

“இதில் அல்லாஹ் இருக்கிறான் என்று கூறினால் நான் முஷ்ரிக்காகிவிடுவேன். இல்லை எனக் கூறினால் நான் காஃபிராகி விடுவேன்” என பதில் சொல்லியுள்ளார்கள். முர்ஷிதுக்கு இந்த பதில் வாயடைக்கச் செய்தது. இதைப் பார்த்த பள்ளிவாசல் நிர்வாகக் கமிட்டியைச் சார்ந்த முஹம்மது சாலிஹ் மரைக்காயர் என்பவர் அந்த முர்ஷிதைப் பார்த்து “ஏன் ஹஜ்ரத் பேசாமலிருக்கிறீர்கள்?” எனக் கேட்க, அதற்கு அவர் “ஆழம் தெரியாமல் காலை விட்டுவிட்டேன்” எனச் சொல்லி நாயகத்தின் கைகளை கண்களில் ஒத்திக் கொண்டாராம்.

**கண்ணியம் உணர்ந்த காயிதே மில்லத்.**

பொறையார் பள்ளிவாசல் திறப்புவிழாவில் கலந்து கொள்ள நாயகம் அவர்கள் அழைக்கப்பட்டு அதற்கான அழைப்பிதழ்கள், வால் போஸ்டர்கள் அச்சடிக்கப்பட்டு, அந்த அழைப்பிதழ்களை அவ்விழாவின்

தலைவர் காயிதே மில்லத் இஸ்மாயில் சாஹிப் அவர்களிடம் விழாக் குழுவினர் காட்டியுள்ளனர். அதில் காயிதே மில்லத் அவர்களின் பெயர் மேலேயும் நாயகம் அவர்களின் பெயர் கீழேயும் பிரசுரிக்கப்பட்டு இருந்தது கண்டு அதிர்ச்சி அடைந்த காயிதே மில்லத் அவர்கள், "இவை எதையும் வினியோகிக்க வேண்டாம். நான் சொல்வது போல் பிரசுரித்து விநியோகிக்க வேண்டும்" எனச் சொல்லி நாயகம் அவர்களின் பெயரை மேலே எழுதி தம் பெயரைக் கீழே எழுதிக் கொடுத்து "இப்படி பிரயோகிப்பதுதான் சிறந்தது , ஏன் என்றால் அவர்கள் சாதாத்தே ரஸூல்" எனச் சொல்லி விளக்கம் தந்தது அன்று பிரபலமான செய்தி.

**பத்வா என்றால் என்ன?**

நீடூர் மத்ரஸா நாஜிர் இப்ராஹிம் ஹஜ்ரத் அவர்கள் நாயகம் அவர்களின் இந்தியவிஜயத்தின் ஒவ்வொரு முறையும் நீடூர்வழியாக வரும் நாயகத்தை ரயில்வே ஸ்டேசனுக்கு மத்ரஸா பிள்ளைகள் எல்லோரையும் அழைத்துச் சென்று நாயகம் அவர்களின் நஸீஹத்தையும் துஆவையும் பெற்று வரும் பழக்கமுடையவர். அவரின் மனைவி காலமாகிவிட்டதால் அவர்களுக்கு கித்மத் செய்து வந்த பெண்மணியையே முறைப்படி நிக்காஹ் செய்து கொண்டார். இதை ஒரு முன்கிர் அவதூறு பேசி அமானி ஹஜ்ரத் உள்ளிட்ட பல ஆலிம்களிடம் ஃபத்வாவும் வாங்கி அவர் பெயருக்கு ஒரு களங்கம் ஏற்படுத்த முயற்சி மேற்கொண்டார். இப்ராஹிம் ஹஜ்ரத் அவர்கள் நாயகத்தைச் சந்தித்து இவ்விஷயத்தைத் தெளிவுபடுத்தி ஃபத்வா கேட்டுள்ளார். நாயகம் அவர்கள் ஏற்கனவே ஃபத்வா கொடுத்தவர்களின் விபரத்தை அறிந்து அவர்களைத் தொடர்பு கொண்டு அவர்களின் விளக்கத்தையும் இதில் சம்பந்தப்பட்டவர்களையும் அழைத்துப் பேசியும் இது சம்பந்தமாக ஃபத்வா வழங்கிய அமானி ஹஜ்ரத் அவர்களிடமும் விளக்கம் கேட்டார்கள். ஃபத்வா என்பது மார்க்கத் தீர்ப்பு அல்ல. சுவாலுக்கு ஜவாபு (கேள்விக்கு பதில்). தீர்ப்பு என்றால் எப்படி இருக்க வேண்டும் என்றால் குற்றம் சாட்டப்பட்டவர் குற்றம் சாட்டுபவர் களை நேரில் அழைத்து விசாரித்து, இதில் யார் பக்கம் உண்மை உள்ளதோ அதை வைத்து உண்மை உள்ளவருக்கு சாதகமாகத் தீர்ப்பளிப்பதுதான் உண்மையான தீர்ப்பு. அதுதான் நியதி. நீங்கள் இப்படிச் செய்யலாமா? என அமானி ஹஜ்ரத்திடம் கேட்டு இருந்தார்கள். அதற்கு அமானி ஹஜ்ரத் உட்பட பல ஆலிம்கள் எழுதிய பதில் என்னவென்றால் "நாங்கள் இது விஷயமாக அவசரப்பட்டு விட்டோம்" என்பதுதான். நாயகம் அவர்கள் முறையாக விசாரித்து இப்றாஹீம் ஹள்ரத் குற்றமற்றவர் எனத் தீர்ப்பு வழங்கினார்கள். ஒரு விஷயத்தை தீர்க்கமாக ஆராய்ந்து தீர்ப்பளிப்பவர்கள் வலிமார்கள்.

நாயகம் அவர்கள் நிறைய அரபிப் பாக்கள் எழுதும் ஷாஇர். அவர்கள் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், கௌது நாயகம் (ரலி), சாதுலி நாயகம் (ரலி), பாதுஷாநாயகம் (ரலி) ஜமாலிய்யா மௌலானா (ரலி) ஆகியோர் மீது அரபு பைத்துகளும் மற்றும் பல கஸீதாக்களும் எழுதியுள்ளனர். பூஸரி இமாம் அவர்களின் கஸீதத்துல் முளரிய்யா வுக்கு தக்மீஸ் செய்து உள்ளார்கள். முன்னர் புர்தாவுக்கும் சிறப்புமிகு ஹம்ஜிய்யாவுக்கும் சதக்கத்துல்லாஹ் அப்பா அவர்கள் தக்மீஸ் செய்துள்ளார்கள். அவர்களுக்குப் பிறகு 600 வருடத்தில் யாரும் செய்யாத, செய்ய முயற்சிக்காத கஸீதத்துல் முளரிய்யாவுக்கு நாயகம் அவர்கள் தக்மீஸ் செய்து இந்தப் பணி அவர்களுக்காக அதாவது தமக்காக விடப்பட்டது எனச் சொல்வார்கள்.

திருமுல்லைவாசலில் முஹம்மதிய்யா அபிவிருத்தி சங்கம் என ஒரு சங்கம் செயல்பட்டு வந்தது. நாயகம் அவர்கள் அச்சங்கத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். அப்போது முஹம்மதிய்யா அபிவிருத்தி சங்கம் என்ற பெயரை மாற்றி இஸ்லாமிய அபிவிருத்தி சங்கம், எனப் பெயர் வைத்து அதன் சட்ட திட்டங்களை வகுத்துக் கொடுத்து அறிவுரைகள் வழங்கிப் பேசினார்கள். அது 50 ஆண்டு பொன்விழா கண்டு தற்போது மஹாலாக விளங்குகிறது. அதன் பொன்விழா மலரின் முதல் பக்கத்தில் நாயகத்தை கண்ணியப்படுத்தும் வகையில் அவர்களின் ஃபோட்டோவைப் பிரசுரித்து அவ்வூரைச் சேர்ந்த கவிஞர் மு. எஹ்யா

**நாமணக்கும்! நல்லருள் மணக்கும்!**
**மௌலானா என்ற பேர் மணக்கும்!**
**பாமணக்கும்! முல்லை எனும் ஊர் மணக்கும்!**
**சீர்மிகு செய்யது யாஸீன்**
**புகழ் பாடுகின்ற வாய் தேன் மணக்கும்!** என எழுதுவார்.

### அறபிகள் வியந்த அறபுப் புலமை!

நாயகம் 1959 ஆம் வருடம் புனித ஹஜ் யாத்திரைசென்றிருந்த போது அவர்களைச் சந்தித்து உரையாடிய கஃபத்துல்லாஹ்வின் நிர்வாக அதிகாரிகள் அவர்களின் இலக்கணம் செறிந்த அரபி உரையாடலைக் கண்டு வியந்து ஹஜ்ஜுக்கு வந்த மக்கள் மத்தியில் மார்க்க உபன்னியாசம் செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நாயகம் அவர்கள் சிறப்பானதோர் உரையை நிகழ்த்தினார்கள். அதைக் கேட்ட அரபிகள் அனைவரும் நாயகத்தை "ஷெய்குல் அரபி" என்று போற்றியதோடு அவர்களைக் கண்ணியப்படுத்தும் விதமாக விருந்தும்

அளித்தனர். நாயகம் அவர்கள் குறைவாகச் சாப்பிடுவதைக் கண்ட அரபிகள் "நீங்கள் அரபியாக இருந்தும் ஏன் குறைவாகச் சாப்பிடுகிறீர்கள்?" எனக் கேட்டதற்கு "பூர்வீகத்தில் நாம் அரபியாக இருந்த போதிலும் இப்போது நாம் அஜமியாக இருக்கிறோம்" என்றார்கள். அதற்கு அரபிகள் நீங்கள் அஜமியல்ல. அசல் அரபிதான் எனச் சொன்னார்கள். இவ்விஷயத்தை அவ்வருடம் ஹஜ்ஜுக்குச் சென்றிருந்த நாகூரைச் சேர்ந்த மர்ஹூம் முஹம்மது இப்ராஹீம் என்பவர் என் திருமண சமயத்தில் மக்காவில் அவர்களுக்கு நடந்த சிறப்பைப் பற்றி எம்மிடம் எடுத்துக் கூறினார். அவர்களின் சிறப்புக்குரிய இவ்வுலக வாழ்க்கை நிறைவுற்று நித்திய ஜீவியாக தாம் மாறப் போவதை தங்களது கலீஃபா அப்துல் கரீம் ஜமாலி அவர்களிடத்தில் சூசகமாகச் சொல்லி நம்மிடத்தில் மூன்று இடங்களைக் குறித்து இலங்கையா? தோட்டமா? திருமுல்லைவாசலா? எனக் கேட்கப்படுகிறது எனக் கூறி உள்ளார்கள். அதைக் கேட்ட கலீஃபா அவர்கள் நாயகம் தங்கள் மறைவைப் பற்றிக் கூறுகிறார்கள் என்பது அறிந்து கவலை கொண்டார். பிறகு 1966 ஆம் ஆண்டு துல்கஃதா மாதம் பிறை 7 வியாழன் மாலை தங்கள் குறிப்பேட்டில் எழுதி வைத்தது போல் சரியாக 05.30 மணிக்கு இவ்வுலக வாழ்வை நிறைவு செய்து நித்திய ஜீவன் பெற்றார்கள்.

அவர்களின் ஆயுட்கால பணிகளைத் தொடர்ந்து நடத்துவதற்காக தங்களது இளைய மகனாரும் நமக்கெல்லாம் சற்குருவுமாகிய ஜமாலிய்யா அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மௌலானா அல் ஹாஷிமிய் நாயகம் அவர்களை தமது பிரதிநிதியாகத் தமது பக்தர்களிடம் முன்னறிவிப்புச் செய்து இருந்ததன்படி தமது தந்தையின் பணியை நமது செய்கு நாயகம் அவர்கள் ஏற்று இன்றுஇலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, குவைத், லண்டன், துபாய் போன்ற நாடுகளிளெல்லாம் ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையை நிறுவி, அதன் மூலம் தவ்ஹீது எனும் ஏகத்துவ ஞானம் பல்கிப் பெருகுவதற்கு பணியாற்றி வருகிறார்கள்.

இறையை அறியும் உயர்ந்த தத்துவங்களை தமது அன்பர்களுக்கு நேரடியாகவும் ஆத்மார்த்த ரீதியாகவும் செயல்படுத்தி வருகிறார்கள். அதன் காரணமாக தந்தையார் ஏற்படுத்திய தரீக்காவின் வளர்ச்சி அபரிமிதமாக பல்கிப் பெருகி வருகிறது என்பது கண்கூடு.

இந்த நூற்றாண்டுக்கு நாமேயாவோம்! எதிர் வரும் நூற்றாண்டுகளும் எம் பார்வை யிலேயே நடைபெறும் என சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் கூறியதை ஹக்கு சுபுஹானஹூ வதஆலா - மெய்ப்பிக்கும்.

# வக்ஃப் திருத்த சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து பதவி விலகிய முஸ்லிம் ஐபிஎஸ் அதிகாரி!

■ மிகச் சிறந்த சேவைக்கான குடியரசுத் தலைவரின் பதக்கத்தை இருமுறை வென்ற ஐபிஎஸ் அதிகாரி நூருல் ஹுதா வக்ஃப் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

பீகார் மாநிலம் சீதாமஹியைச் சேர்ந்தவரும், 1995 ஆம் ஆண்டு பயிற்சி முடித்த ஐபிஎஸ் அதிகாரியுமான நூருல் ஹுதா தன்பாத், அசானோல், டெல்லி ஆகிய ரயில்வே பிரிவுகளில் பாதுகாப்பு மற்றும் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளில் சிறப்பாகப் பணியாற்றியதற்காக அவருக்கு இருமுறை குடியரசுத் தலைவரின் விசிஷ்ட சேவா பதக்கம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், காவல்துறைத் தலைவரின் டிஜி சக்ரா விருதையும் இருமுறை பெற்றுள்ளார்.

■ 2008 மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கில், முன்னாள் பாரதிய ஜனதா கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சாத்வி பிரக்யா சிங் தாக்கூர் உட்பட, குற்றம் சாட்டப்பட்ட ஏழு பேருக்கும் மரண தண்டனை விதிக்க வேண்டும் என தேசிய புலனாய்வு முகமை (NIA) சிறப்பு நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளது.

1,500பக்கங்களுக்கு மேலான இறுதி எழுத்துப்பூர்வ வாதங்களை சனிக்கிழமையன்று சமர்ப்பித்த முகமை, சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் (UAPA) பிரிவு 16-ஐ மேற்கோள் காட்டி, மிகக் கடுமையான தண்டனையை கோரியுள்ளது.

2008 செப்டம்பர் 29 அன்று மகாராஷ்டிராவின் மாலேகானில் நிகழ்ந்த குண்டுவெடிப்பில், முஸ்லிம்களான ஆறு பேர் உயிரிழந்தனர். 100-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இது மத நல்லிணக்கத்திற்கு பெயர் பெற்ற சிஷ்ய நகரத்தை உலுக்கியது.

சிக்கலான விசாரணைகள் மற்றும் அரசியல் சர்ச்சைகளால் 17 ஆண்டுகள் நீடித்த இந்த வழக்கில் தேசிய புலனாய்வு என்.ஐ.ஏவின் மனு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது. சாத்வி பிரக்யா, லெப்டினன்ட் கர்னல் பிரசாத் புரோஹித் மற்றும் ஐந்து பேர் உட்பட குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஆவர்.

தேசிய புலனாய்வு முகமை (NIA) முன்வைக்கும் குற்றச்சாட்டின்படி, சாத்வி பிரக்யா, லெப்டினன்ட் கர்னல் பிரசாத் புரோஹித் மற்றும் மேலும் ஐந்து பேர் அடங்கிய

இந்த குற்றவாளிக் குழு, முஸ்லிம் சமூகத்தை குறிவைத்து இந்துத்துவா சித்தாந்தத்தால் தூண்டப்பட்ட பயங்கரவாத தாக்குதலை நிகழ்த்த சதி செய்தனர். மேலும்

தேசியப் புலனாய்வு அமைப்பின் கூற்றுப்படி, இந்த குழு ஒரு தீவிர சித்தாந்த நோக்கத்தை முன்னெடுப்பதற்காக இந்த குண்டுவெடிப்பை மிக நுணுக்கமாக திட்டமிட்டு வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்தி, குண்டுவெடிப்பை நிகழ்த்தியது.

2008 ஆம் ஆண்டு மாலேகான் குண்டுவெடிப்பு சம்பவம் ஆரம்பத்தில் புலனாய்வு அதிகாரிகளை குழப்பத்தில் ஆழ்த்தியது. ஆரம்பகட்ட சந்தேகங்கள் இஸ்லாமியக் குழுக்களை நோக்கி இருந்தன. இருப்பினும், மகாராஷ்டிர பயங்கரவாத தடுப்புப் படை (ATS) வலதுசாரி இந்து தீவிரவாதிகளின் தொடர்பு இருக்கலாம் என்று காட்டும் ஆதாரங்களை வெளிக்கொணர்ந்தபோது விசாரணையின் போக்கு வியத்தகு முறையில் மாறியது. இந்த வழக்கு பின்னர் தேசியப் புலனாய்வு முகமைக்கு (NIA) மாற்றப்பட்டது. தடயவியல் சான்றுகள், இடைமறிக்கப்பட்ட தொலைபேசி உரையாடல்கள் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக NIA விரிவான குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது. இந்த தாக்குதல் திட்டமிட்டே நடத்தப்பட்டது என்றும், வகுப்புவாத மோதலை உருவாக்கும் நோக்கத்துடன் இது மேற்கொள்ளப்பட்டது என்றும் NIA தனது வாதங்களில் வலியுறுத்தியுள்ளது.

இந்த வழக்கில் முக்கிய நபராகக் கருதப்படும் சாத்வி பிரக்யா, அரசியல் பழிவாங்கல்களுக்காகத் தான் பொய்யாக குற்றம் சாட்டப்பட்டதாகத் தொடர்ந்து மறுத்து வருகிறார். இந்து தேசியவாத இயக்கங்களை அவதூறு செய்யும் முயற்சி இது என்று அவரது ஆதரவாளர்கள் வாதிடுகின்றனர். இருப்பினும், NIA சமர்ப்பித்த அறிக்கை முற்றிலும் மாறுபட்ட சித்திரத்தை வரைகிறது. அதில் அவர் இந்த பயங்கரவாத சதித்திட்டத்தில் முக்கிய சூத்திரதாரியாக சித்தரிக்கப்பட்டுள்ளார். உயிர்கள் பலியானதையும், தாக்குதலின் வகுப்புவாத நோக்கத்தையும் கருத்தில் கொண்டு குற்றத்தின் தீவிரத்தை நீதிமன்றம் கவனிக்க வேண்டும் என்றும், மரண தண்டனை விதிக்க வேண்டும் என்றும் NIA வலியுறுத்தியுள்ளது.

---

சரும நோய்

கமலா ஆரஞ்சு தோலை வெயிலில் காயவைத்து பொடி செய்து தினமும் சோப்புக்கு பதிலாக உடம்பில் தேய்த்து குளித்து வர சரும நோய் குணமாகும்.

# 5. நாங்கள் கண்ட முஹிய்யுத்தீனிய சன்னிதானம்

**A. முஹம்மத் ஸகரிய்யா (கப்பல் பொறியாளர்). ஹக்கிய்யுல் காதிரி**

بسم الله القادر

هذه القصيدة الحاجية على الحاج سيد محمد الوتر
المرحوم الستوار فدي غفر الله عنه وجعل الجنة مثواه
للفقير ابي الجمال محمد بدر الدين الفاضل النوري ابن الشيخ
احمد لبّيه العالم المرحوم المخدومي الصدّيقي القسطني كان الله الغني

———o———

ألا الحمد لله الولي لداجنا ، عديم الشريك المستعان لحاجنا
ومبدي خيار الأنبياء وتاجنا ، سخي الورى سيد محمد حاجنا
هو الحمد والمحمود بل هو حامد ، بسر سرى في الكل والكل عامد
إلى الذات لكن علمنا فيه خامد ، سخي الورى سيد محمد حاجنا
تعالى عن الأنداد والشرك والمثل ، تجلى مع التنزيه في الكون بالمثل
وليا حميدا بالعبادة ممتثل ، سخي الورى سيد محمد حاجنا
ونشكره شكرا غزيرا بسرمد ، باظهار انجاب وإيفاء معهد
وابرار ارباب الصفاء المصمد ، سخي الورى سيد محمد حاجنا
نصلي على خير المظاهر والأتم ، محمد الموصوف بالبدء والختم
هو الفرع من اصل بل الأصل والمتم ، سخي الورى سيد محمد حاجنا

١ لاعواننا اي اقويائنا تكفي ١٢
٢ جمع حاجة اي نفتقر تكفي ١٢
٣ المراد بالتاج هنا محمد صلى الله عليه وسلم ١٢

وَآلٍ تَزَكَّوْا ثُمَّ أَصْحَابِهِ وَمَنْ ، يَتْبَعْ لَهُمْ فَازُوْا بِدِيْنٍ مَعَ الْأَمَنْ[1]

وَتُبَّعِهِمْ بِالْحَقِّ وَالْعَدْلِ وَالْأَتَمَنْ ، سَخِيِّ الْوَرٰى سَيِّدْ مُحَمَّدُ حَاجِنَا

فَأَمَّا الَّذِيْ مَدْحِيْ عَلَيْهِ مُنَظَّمٌ ، فَذُوْ مَنْصَبٍ جُوْدٍ وَفَضْلٍ مُعَظَّمُ

حَسِيْبٌ نَسِيْبٌ مُسْتَفَادٌ مُخَضَّرٌ[2] ، سَخِيُّ الْوَرٰى سَيِّدْ مُحَمَّدُ حَاجِنَا

مُحِبٌّ لِذِيْ عِلْمٍ وَأَفْقَرِ دَارِنَا ، وَأَهْلِ الصَّفَا وَالْأَوْلِيَاءِ مَدَارِنَا

خُصُوْصًا مَهَا نَنْدَا وَلِيِّ قَدَارِنَا[3] ، سَخِيُّ الْوَرٰى سَيِّدْ مُحَمَّدُ حَاجِنَا

سَمِيٌّ بِجَيْلَانِيِّ مُحْيِي لِدِيْنِنَا ، رَئِيْسِ الْأَقَاطِيْبِ الْجَلِيِّ أَمِيْنِنَا

سُمَا مُحَمَّدُ عَبْدُ قَادِرٍ مُعِيْنِنَا ، سَخِيُّ الْوَرٰى سَيِّدْ مُحَمَّدُ حَاجِنَا

وَذَاكَ الْوَلِيُّ الْعَارِفُ الْمُتَنَزِّهُ ، مِنَ الْغَيْرِ عَنْ حَقٍّ تَعَالٰى يُنَزِّهُ

عَنِ النِّدِّ بَلْ ذَاتٌ عَزِيْزٌ مُنَزَّهُ ، سَخِيُّ الْوَرٰى سَيِّدْ مُحَمَّدُ حَاجِنَا

بِصُحْبَتِهِ نَالَ الصَّفَا وَعِنَايَةً ، وَهَدْيًا إِلَى النَّهْجِ الْقَوِيْمِ وِقَايَةً

مِنَ الْخَذْلِ وَالْخُسْرَانِ مُنْجِيْ حِمَايَةً ، سَخِيُّ الْوَرٰى سَيِّدْ مُحَمَّدُ حَاجِنَا

[1] مع الاطمئنان اي بحيث يتيقن ١٢

[2] رغيد العيش اي بلوغ المنى اعور ١٢

[3] قدرتنا اي عهدي وطلبي ١٢

யாஸீன் நாயகமவர்களும் சிலரைத்தவிர மற்றவர்களுக்கு தங்களின் குத்பிய்யத்தை மறைத்திருந்தார்கள். குத்புமார்கள் இவ்வாறு குத்பிய்யத்தை மறைத்து காலம் வரும்போது வெளிப்படுத்துவார்கள் என்பதை வாப்பா நாயகம்வர்கள் பட்டோலையில் அறிவித்துள்ளார்கள். 29.06.1966 பட்டோலையில் "தன்னை மறைத்து குத்பாக வாழ்ந்த குத்புமார்களும் இருப்பர். பகிரங்கமாக தன்னை குத்பு எனக் கூறும் குத்புமாரும் இருப்பர். தேவையா சந்தர்ப்பங்களில் அவர்கள் தம்மை வெளியிட வேண்டியகாலம் வந்தபோது வெளியிடுவர்" என்று எழுதியள்ளார்கள். *(தொடர்ந்து சன்னிதானம் காட்சிதரும்)*

## காரணக் கலிமா

பரிசுத்த கலிமாவினிமித்தமே வேதங்கள், நபிமார்கள், முர்ஸல்கள், வேத பாரங்கதர்கள், பரமார்த்தீக உபந்நியாசகர்கள் யாவரும் மனிதரளவில் அனுப்பப்பட்டனர். அதனிமித்தமே சரித்திரங்களில் நிகழ்ந்த – நிகழ்கின்ற – நிகழப் போகிற சம்பவங்கள் யாவும், விதியில் நிகழ்ந்தன. உலக வேறுபாட்டிற்கும் அதன் மோட்சத்திற்கும் ஆம், அதன்பிறப்பு, இருப்பு, இறப்பு எல்லாவற்றிற்கும் அதுவே காரணமாகும்.

மனிதன் சத்திய கர்த்தாவின் சிங்காசனம், அதன்பிரதிபிம்பம், அதன் தோன்றுதுறை என்றெல்லாம் சிறப்பித்துக் கூறப்படுவது இந்தக் கலிமாவின் அர்த்தபுஷ்டியேயாகும்.

மனிதன் ஆத்ம பலம் பெற்று, அவன் புலன்கள் சக்திமிக்கதாகி, சர்வ உலகங்களிலும் ஆத்மார்த்தமய்ப் பரிணமித்துப் பரமார்த்தீக இலட்சிய இலட்சணங்களுடன் திகழ்ந்து, நித்திய ஜீவன் பெற்று, சம்பூரணானந்தனாகி சர்வமும் சம்பூரணமான சச்சிதானந்தத்தின் அம்சமாகிப் பரிணமிக்க, இந்தக் கலிமா ஜீவாமிர்த ஜீவசக்தி யாயும் ஒப்பற்ற இன்றியமையாத தனிப்பெருஞ் சாதனமாயும் இருக்கிறது.

***(குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா (ரலி) அவர்கள்.)***

---

பெருமானர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை நாம் எவ்வளவு புகழ்ந்தாலும் அவர்களின் தன்மைகளில் ஆயிரத்தில் ஒன்றைக்கூட சம்பூரணமாக சொல்லிமுடிக்க முடியாது. ஏனெனில் எவ்வளவுதான் எம்பெருமானாரைப் புகழ்ந்தாலும் அனைத்தையும் விட அவர்களின் புகழ் உயர்ந்ததாவே இருக்கிறது.

(உமர் வலிய்யுல்லாஹ் – ரஹ்–அவர்கள்)

## சங்கைமிகு செய்கு நாயகங்களின்

# உதயதின விழாக்கள்!

**திண்டுக்கல்**

ஏகத்துவ மெய்ஞ்ஞானசபை, தரீகத்துல் ஹக்கிய்யதுல் காதிரிய்யா சார்பில் நபிகளாரின் திருப்பேர் முத்தமிழ் மூதறிஞர் ஆத்ம ஞான மகான் குத்புஸ் ஸமான் ஜமாலியா அஸ்ஸையித் கலீல் அவுன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிநாயகம் மௌலானா அவர்களின் 90 ஆம் ஆண்டு உதய தினமும் அவர்களின் அருள்பேரர் இறையருள் ஞானி குத்புஸ்ஸமான் ஜமாலியா சையத் யாசின் அலி மவுலானா அவர்களின் 34 ஆம் ஆண்டு உதய தினங்களை முன்னிட்டு கொண்டாடும் தரீக்கா ஞா ன எழுச்சி விழா 20 .4. 2025 ஞாயிறு காலை 10 மணியிலிருந்து மதியம் 2 மணி வரை சுவாகத் ஹோட்டல் நாகல் நகர் அரங்கத்தில் ஹாஜி ஜே. முஹம்மது ரஹ்மத்துல்லாஹ் பி.ஏ.பி.காம். ஹக்கியுல் காதிரி அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. மௌலவி அபூபக்கர் யாசினி கிராத் ஓத மௌலவி காஜா சரீப் யாசினி ஞானப் பாடல் பாட. அப்துல் மஜீத் குரு புகழ் பாட அய்னுல்ஹக் வரவேற்புரை நிகழ்த்தினார். கவிஞர் நாதமணி அவர்கள் இறையருட்பா இலக்கியம் என்ற தலைப்பிலும் முனைவர் அ.காதர்பாட்ஷா சிறார் பாடல்கள் ஒரு பார்வை என்ற தலைப்பிலும் சிறப்புரை நிகழ்த்த எம் .முகமது அப்துல்லா ஷரியத்தின் காவலர் சங்கைமிகு சேகுநாயகம் என்ற தலைப்பிலும் ஹாஜா சரீப் யாசீனி ஜமாலியா தோட்டத்தின் புதுமலர் யாசின் அலி நாயகர் என்ற தலைப்பிலும். எஸ். காஜா நஜ்முதீன் இருந்ததும் பூரணம் மலர்ந்ததும் பூரணம் என்ற தலைப்பிலும் ஏ. உமர் பாரூக் ஹ.காதிரி வாழ்க்கை தரும் வள்ளலே என்ற தலைப்பிலும் ஜே. நஜ்முதீன் அள்ளக்குறையாத அறிவுக் களஞ்சியம் என்ற தலைப்பிலும் சீனி அப்துல் காதர் வாழ்வேகராமத் அற்புதம் என்ற தலைப்பிலும் ஜே. முகமது சதகத்துல்லா பிஎஸ்சி சத்தியத்தின் நாவு என்ற தலைப்பிலும் உரை நிகழ்த்தினர்.பி.எம்.ஏ.அசரப் அலி நன்றியுரை வழங்கினார் . 1மணிக்கு கஸீததுல் அகமதிய்யா கஸூதத்துல் அவுனிய்யா ஓதப்பட்டது. திண்டுக்கல் சபை வளர்ச்சிக்கு பாடுபட்ட மறைந்த கலீபாக்கள் முரீதுகள் முரீதாக்களுக்காக ஜமால் முஹம்மது ஆலிம் பாகவி துவா ஓதினார். இறுதியாக தப்ரூக்வழங்கப்பட்டது .கந்தூரி உணவு வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை தலைவர் கலீபா ஆலிம் புலவர் அவர்களும் சதக்கத்துல்லா செயலாளர் அவர்களும் காஜா நஜ்முதீன் அவர்களும் காஜா யாசினி அவர்களும் சிறப்பாக செய்திருந்தனர் திருச்சி யாசின் அவர்கள் துணிப்பை வழங்கினார்.

# ஷார்ஜாவில் சிறப்புமிகும் உதயதின விழா

20-04-2025, ஞாயிற்றுக்கிழமை துபை சபை சார்பாக ஷெய்கு நாயகம், குத்புஸ்ஸமான், ஷம்ஷூல் வுஜூத், ஹக்குல் முபீன், ஸிர்ருல் ஹக், நாயிபே ரஸூல், வாரிஸே முஸ்தபா ஜமாலிய்யா அஸ்ஸெய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களுடைய உதயதின விழா சிறப்பு மாதாந்திர கூட்டமாக மிகவும் விமரிசையாக மதுக்கூர் M.A.முஹம்மது ஸாதிக் அவர்களுடைய ஷார்ஜா இல்லத்தில் மௌலானாமார்கள் முன்னிலை வகிக்க, கலிபா பெருந்தகைகள் மற்றும் முரீதுகள் புடைசூழ நடைபெற்றது.

புகழ்மாலையும், புனிதமிகும் கஸீததுல் அவ்னிய்யாவும் அலங்கரிக்க, பக்திப் பெருக்குடன் மஜ்லிஸ் ஆரம்பம் ஆனது.

சிறப்பு மாதாந்திர கூட்டம் கண்ணியத்திற்குரிய ஸெய்யித் அலி மௌலானா அவர்களின் தலைமையில் துவக்கமானது.

மூன்று நிமிட மௌனத்திற்கு பிறகு, கிராஅத் மற்றும் வஹ்ததுல் வுஜூத் ஏகாந்தப் பாடலின் அரபி மூலத்தை மௌலவி ஸத்தார்கான் யாஸீனிய் அவர்கள் ஓத, ஆழியூர் அபுல் பஷர் அவர்கள் அதனுடைய தமிழாக்கம் செய்தார்கள்.ஞானப்பாடலை மதுக்கூர் அலி அக்பர் இசைக்க, புகழ்ப்பாடலை மதுக்கூர் OPU ஹாஜா முஹையத்தீன் அவர்கள் பாடினார்கள்.

தலைமையுரையை கண்ணியத்திற்குரிய ஸெய்யித் அலி மௌலானா அவர்கள் உரையாற்ற, தொடர்ந்து குளோபல் தலைவர் முனைவர் கலீபா ஷஹாப்தீன் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். தொடர்ச்சியாக முனைவர் இஞ்சினியர் M.J.முஹம்மது இக்பால் உரையாற்ற, திண்டுக்கல் இப்ராஹிம் அவர்கள் புகழ்மாலை ஒன்றை அவைக்குத் தந்தார்கள்.

தொடர்ச்சியாக துபை சபையின் துணைத் தலைவர் அப்பாஸ் ஷாஜஹான் அவர்களும், இறுதியாக திருவாவடுதுறை இஞ்சினியர் ஜுபைர் அவர்களும் உரையாற்ற, தொடர்ந்து தவ்பா பைத், ஸலாம் பைத் மற்றும் புனித ஸலவாத்துடன் நிகழ்வுகள் யாவும் அலங்காரம் பெற்று இனிதே நிறைவு பெற்றது. கண்ணியத்திற்குரியஸெய்யித் அலி மௌலானா அவர்களின் தலைமையுரையிலும், கலீபா பெருமக்கள் மற்றும் அனைத்து ஆத்ம சகோதரர்களின் சொற்பொழிவுகளிலும்விழா நாயகரின் மகோன்னதமான உயர் நிலைகளையும், அவர்களின் வல்லமையையும் வெளிப்படுத்தியும் சுடர் விட்டுப் பிரகாசித்தது.வருகை தந்த அனைவரும் செவி விருந்தை அருந்தியதோடு, நாவிருந்தையும் அருந்திச் சென்றார்கள்.விழா நாயகரின் பொருட்டால் அனைவரும் சம்பூரண பெருவாழ்வு அடைவோமாக.

*தகவல் –மதுக்கூர் ஜஉபர் ஸாதிக்,அபுதாபி*

## பெரம்பலூர்

20.04.2025 ஆம் தேதி பெரம்பலூர் பைதுர்ரஹ்மாவில் சங்கை மிகு ஷைகுநாயகங்களின் உதய தினத்தை சிறப்பாக கொண்டாடப்பட்டது. அத்துடன் உம்மாநாயகத்திற்கு பெண்கள் ஓதிய 3 குர்ஆன் ஷரீபும் ஈசால் தவாபு செய்து துஆ ஓதப்பட்டது.வருகை தந்த அனைவருக்கும் பிரியாணி உணவும் தப்ரூக் ஸ்வீட்டும் வழங்கப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ்.

செயதி: சர்புதீன் ஹக்கிய்யுல் காதிரிய் யாஸீனீய்.

## திருச்சி

சங்கைக்குரிய ஷைகு நாயகம் குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் 34 ஆம் புனித உதய தின விழா, இன்று 20.04.2025 ஞாயிற்றுக்கிழமை திருச்சியில் ஜனாப் A. முஹம்மது ஸகரிய்யா ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களின் மன ராஹத் மன்ஜிலில் காலை 10.00 மணிக்கு, புனித கஸீதத்துல் அஹ்மதிய்யா மற்றும் கஸீதத்துல் அவ்னிய்யா மஜ்லிஸுடன் தொடங்கியது.

நிகழ்ச்சிக்கு, மதுரஸதுல் ஹஸனைன் பீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரி நாழிர் ஹள்ரத் மௌலவி என். ஸயீது முஹம்மது ஆலிம் மிஸ்பாஹி ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் தலைமை தாங்கினார். கலீபா எம். சிராஜுத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் முன்னிலை வகித்தார்.

தொடக்கமாக, மௌலவி. A. முஹம்மது ஹாரிஸ் ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் கிராஅத் ஓதினார். மௌலவி S. பீர் முஹம்மது ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் வஹ்தத்துல் வுஜூத் பாட, அதற்கான பொருளை ஜனாப் A. நைனார் முஹம்மது அன்சாரி ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களும் மௌலவி. A. முஹம்மது ஹாரிஸ் ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களும் இணைந்து வாசித்தனர். மௌலவி ரஹ்மான்ஷா ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களும், இப்ராஹிம் ஒலி ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களும் ஏகாந்தம் பாடலைப் பாடினார். தொடர்ந்து, மௌலவி சையது இப்ராஹிம் ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களும் ஜனாப். முஹம்மது பாரிஹ் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களும் நபிப்புகழ்ப்பா பாடினார்கள்.கலீபா எம். சிராஜுத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் விழா அறிமுக உரை யாற்றிட, அவர்களைத் தொடர்ந்து, மௌலவி ரஹ்மான்ஷா ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் குரு போற்றல் கீதம் பாடினார்.

தொடர்ந்து, யாஸீனிய் மௌலவிகள் பேரவை தலைவர் மௌலவி A. கலீலுர் ரஹ்மான் ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களும், மூத்த ஆத்தும சகோதரர் மெரைன் இன்ஜினீயர் ஜனாப் A.. முஹம்மத் ஸகரிய்யா ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களும் சிறப்புரையாற்றினார்கள்.

விழாவின் முத்தாய்ப்பாக, கூத்தாநல்லூர் ஜாமிஆ அஷ்ஷஜரத்துன் தய்யிபா பீ தஉவதுல் இஸ்லாமியா பெண்கள் அறபுக்கல்லூரி நிறுவனர் கோவை ஆலிம் மௌலவி ஹாபிழ் A.K.A. ஷர்புத்தீன் பைஜீ ஆலிம் அவர்கள், விழா சிறப்புரையாற்றினார்கள்.

அதனைத் தொடர்ந்து, நிகழ்ச்சித் தலைவர் மௌலவி என். ஸயீது முஹம்மது ஆலிம் மிஸ்பாஹி ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் நிறைவுரையாற்றினார்கள்.

முன்னதாக, திருச்சி ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை பொருளாளர் Er.S.காஜா மைதீன் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் வரவேற்றுப் பேச, நிறைவில் ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை செயலாளர் யாஸீன் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் நன்றியுரையாற்றினார்கள்.

விழா நிறைவாக, மதுரஸதுல் ஹஸனைன் பீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரி பேராசிரியர் என். முஹம்மது ரபீஉத்தீன் ஆலிம் நூரி ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் துஆ ஓதினார்கள்.

லுஹர் தொழுகைக்குப் பிறகு, சிறப்பு விழா விருந்து நடைபெற்றது.

விழாவில் கலந்து கொண்டவர்களுக்கு, கைப் பை ஒன்றும், மஞ்சள் பையும் தப்ரூக்குடன் வழங்கப்பட்டது.

விழாவுக்குத் தேவையான ஏற்பாடுகளை மூத்த ஆத்தும சகோதரர் மெரைன் இன்ஜினீயர் ஜனாப் முஹம்மத் ஸகரிய்யா ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள், ஜனாப் S. யாஸீன் ஹக்கிய்யுல் காதிரிய் மற்றும் ஜனாப் M. பக்ருத்தீன் அலி அஹமது ஹக்கிய்யுல் காதிரிய் ஆகியோரின் ஒருங்கிணைப்பில் ஆத்தும சகோதரர்கள் மற்றும்யாஸீனிய் மௌலவிமார்கள் அனைவரும் இணைந்து செய்திருந்தனர்.

பிரபஞ்சப் பெருவிழா, பேரானந்தத்துடன் நிறைவு பெற்றது.

அல்ஹம்துலில்லாஹ்.

---

## மறைஞானப் பேழை சந்தா புதுப்பித்துவிட்டீர்களா?

# பாவிகளுக்கு இழிவு மியான்மர் அழிவு!

வாழத் தகுதியில்லாத மாநிலமாக மியான்மரின் ரைக்கன் மாறிப்போனது 2017 செப்டம்பர் மாதம் தான். ஒரு கற்பழிப்பு குற்றச்சாட்டில் தொடங்கியது அந்த இன அழிப்பு..!. ரோஹிங்கிய முஸ்லீம்கள் எனும் பெயரை இந்த உலகம் அறிந்தது அப்போது தான். இது வரை உலகம் கண்டிராத இன அழிப்பு...

ஹிட்லரின் யூத இன அழிப்போடு ஒப்பிடக் கூடிய மனித படுகொலைகளை கட்டவிழ்த்து விட்டது வேறு யாருமல்ல!.

அன்பையே தாரக மந்திரமாக போதித்த புத்தனைப் பின்பற்றிய மியான்மர் பூமியில் வாழ்ந்த புத்த பிட்சுகள் தான்...

கிட்டத்தட்ட நானூறு கிராமங்களில் வாழ்ந்த ரோஹிங்கிய முஸ்லீம்களை மொத்தமாகத் துடைத்தெறிந்த இனப் படுகொலை!. வங்காள விரிகுடாவின் மேற்குக் கரையான ரைக்கன் மாநிலம் மொத்தமும் ரத்தச் சேற்றை பூசிக்கொண்ட வரலாறுகளை நாம் கொஞ்சம் நினைவு கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்...

ஏ.ஆர்.எஸ்.ஏ.எனப்படும் அரக்கன் ரோஹிங்கிய சால்வேஷன் ஆர்மி உண்மையாகவே அரக்கனாக மாறி கொலை வெறியாட்டம் போட்ட காலகட்டத்தை மொத்த உலகமும் அதிர்ச்சியோடு பார்த்த ஆண்டு 2017....

ஒரே மாதத்தில் இந்த கொடுங்கோலர்கள் கொன்றொழித்த அப்பாவி உயிர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 25 ஆயிரம். யூத வெறியர்கள் போடும் குண்டு மழையில் செத்துப் போன உயிர்கள் அல்ல. இந்த புத்த மத வெறியர்களின் கரங்களாலேயே கொல்லப்பட்ட உயிர்கள்.....

கிட்டத்தட்ட பதினெட்டாயிரம் பெண்களை கற்பழித்தே கொன்ற கூட்டம். ஏதுமறியாத அப்பாவிச் சிறுமிகளை சின்னாபின்னமாக்கிய கூட்டம். ஆண்டு முழுவதும் நடந்த இனப்படுகொலையில் லட்சக்கணக்கான அப்பாவிகளை நாட்டை விட்டே விரட்டியடித்த கூட்டம். 36 ஆயிரம் ரோஹிங்கியாக்களை எரியும் நெருப்பில் தூக்கியெறிந்த கூட்டம். படு குழியை வெட்டி அதில் துடிக்கத் துடிக்க சிறுவர்களை வெட்டி மூடிய கூட்டம். பச்சிளம் குழந்தைகள் என்று கூட பார்க்காமல் கொழுந்து விட்டு எறியும் நெருப்பில் தூக்கிப் போட்ட கூட்டம்...

1970 களில் தான் இந்த கொடுங்கோலர்கள் அங்கிருந்த முஸ்லீம்களை குறி வைத்தார்கள். எந்த வம்புதும்புக்கும் போகாமல் அமைதியாக வாழ்ந்த மக்கள். பத்தாம் நூற்றாண்டில் வணிகத்திற்கு வந்த அரேபியர்கள் பரப்பிய இஸ்லாத்தை தங்களது வாழ்வியலாக ஏற்றுக்கொண்ட மக்கள்...

அன்பை போதித்த புத்தன் அன்றைய பர்மாவிலும் அதையே தான் போதித்தான். தொண்ணூறு சதவீத புத்த மதத்துக்கு நடுவே தான் நான்கு சதவீத இஸ்லாமும் வளர்ந்தது. அவர்களைப் பொறுத்த வரை இரண்டுமே அந்நிய மதங்கள் தான். ஆனால் சகிப்புத்தன்மையற்ற புத்த மதம் இஸ்லாத்தை வெறுப்போடு தான் பார்த்தது....

அங்கிருந்த நிலையற்ற அரசாங்கத்தில் நிலையானது அங்கிருந்த ராணுவம் தான். இங்கிருக்கும் காவிக் கூட்டம் போலவே அங்கும் ராணுவத்தில் புத்த மத வெறியர்கள் மெல்ல மெல்ல நுழைந்தார்கள். டாட் மடாவ் என அழைக்கப்பட்ட ராணுவம் தான் அங்கிருந்த முஸ்லீம்களுக்கு எமனாக மாறிப்போனது. ஹிட்லரின் நாஜிப் படையைப் போல எந்த நேரத்திலும் ரைக்கன் மாநிலத்தில் தனது வெறியாட்டத்தை டாட் மடாவ் கட்டவிழ்த்துவிட தயங்கியதே இல்லை...

1982 ரோஹிங்கிய முஸ்லீம்களை அங்கிருந்த ஆட்சியாளர்கள் அந்நியர் என முத்திரை குத்திய பிறகு தான் நிலைமை கவலைக்கிடமானது. பர்மிய குடியுரிமையை ரோஹிங்கியாக்கள் இழந்தார்கள். சொந்த மண்ணிலேயே அவர்கள் அகதிகளாக மாறிப் போனார். அவர்கள் செய்த பெரும் குற்றம் இஸ்லாத்தை தழுவியது....

ரைக்கனின் தெற்கு முழுவதும் புத்த மத மக்கள் நிறைந்திருக்க வடக்கே ரோஹிங்கியாக்களின் நிலங்களைப் பறிக்க சதி வலைகள் பின்னப்பட்டன. கடுமையாக உழைத்து தங்களது நிலங்களை செழிப்பாக்கியிருந்த அப்பாவி மக்கள் மீது அடிக்கடி அடக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. அதன் உச்ச கட்டம் தான் 2017 இனப் படுகொலைகள்....

ஒட்டு மொத்தமாக வடக்கு பிராந்தியத்தை துடைத்தெறிந்து அங்கிருந்த மக்களை நாட்டை விட்டே ஓட வைத்த வெறியர்களின் அவலக் குரல் இத்தனை ஆண்டுகள் கழித்து அங்கே கேட்கிறது. அதிகமில்லை!.. சில வினாடிகள் தான் அங்கிருந்த நிலம் கொஞ்சமாகத் தான் குலுங்கியது. ஒன்றல்ல இரண்டல்ல. ஒன்றரை கோடி பேர் வீடிழந்து வீதிக்கு வந்திருக்கிறார்கள்....

ஏழாண்டுகளுக்கு முன்பு விரட்டியடிக்கப்பட்ட வீடிழந்த ரோஹிங்கியக் கூட்டம் ஒன்றரை லட்சம். இன்றும் வங்காள எல்லையில் தங்களது வாழ்க்கையை

அவலத்தோடு ஓட்டிக்கொண்டிருக்க விரட்டியடித்தவன் மொத்தமும் இப்போது வீடிழந்த சோகத்தோடு நிற்கிறான். கோடிக்கணக்கான அவனது சொத்துக்கள் நாசம். முற்பகல் செய்த பாவத்திற்கு பிற்பகலில் இறைவனின் தண்டனையாகத் தான் இதை பார்க்க வேண்டியிருக்கிறது....

இறைவன் படைத்த பூமி எனக்கு மட்டும் தான் சொந்தம் என எக்காளமிடும் கூட்டத்திற்கு தக்க பாடமாகவே நாம் மியான்மர் பூகம்பத்தை பார்க்கிறோம்..!. அதிகமான அழிச்சாட்டியம் போடும் தாய்லாந்திற்கும் இறைவன் இன்னொரு பாடத்தை கூடவே கற்றுத் தந்திருக்கிறான். திருந்தாத இந்த ஜென்மங்களுக்கு இறைவனின் இறுதி எச்சரிக்கை. திருமறையை புரட்டிப் பாருங்கள்...!!

நபியே...!!! இந்த நிராகரிப்பாளர்களிடம் நீர் கூறும்...!!! இப்போதேனும் அசத்தியக் கோட்பாடுகளிலிருந்து அவர்கள் விலகிக்கொள்வார்களாயின் முன்பு அவர்கள் செய்த குற்றங்கள் யாவும் மன்னிக்கப்படும். ஆனால் பழைய போக்கிலேயே மீண்டும் அவர்கள் இருந்தால் முற்கால மக்கள் என்ன கதிக்கு ஆளானார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்தது தானே...!!!(8 :38).

---

## சுன்னத்

பெருமானார் (ஸல்) அவர்களிடம் அறிவின் தலைவாயில் அலீ (ரலி) அவர்கள் கேட்ட போது நாயகம் (ஸல்) அவர்கள் தங்களின் நல்வழியை (சுன்னத்தை) சொல்கிறார்கள்.

| | | |
|---|---|---|
| 1) இறைஞானம் | - | என் மூலதனம் |
| 2) பகுத்தறிவு | - | என் பக்தியின் வேர் |
| 3) அன்பு | - | என் அடிப்படை |
| 4) ஊக்கம் | - | என் வாகனம் |
| 5) தியானம் | - | என் தோழன் |
| 6) உறுதி | - | என் உடமை |
| 7) துக்கம் | - | என் துணைவன் |
| 8) அறிவு | - | என் ஆயுதம் |
| 9) பொறுமை | - | என் கேடயம் |
| 10) மனநிறைவு | - | என் வெற்றிப் பொருள் |
| 11) ஏழ்மை | - | என் பெருமை |
| 12) தியாகம் | - | என் கலை |

# திருமுல்லைப் பூவே!

*(சங்கைமிகு யாஸீன் நாயகம் (ரலி) அவர்களின் யவானிஉலிருந்து.....)*

வருடங்கள் 40 எனக்குப் பூரணமானதும் அகிலங்களின் இறைவன் இமாமத்திற்கு (ஆத்மார்த்தத் தன்மைக்கு) என்னைத் தெரிந்து கொண்டான். இது மனிதர் யாவரையும் அவர்களின் தலைவர் பெயரால் நாமழைக்கும் நாளை (அவர்களுக்குக் கூறும்) என்று ஹக்கு கூறிய நியதியினாலாகும்.

ஹிஜ்ரா 1357, ஷஃபானிலே எனது வயது நாற்பதைக் கடந்த பின் எனது நல்லதிர்ஷ்டத்திற்காக வேண்டி எனக்குரியதாயுள்ள சகலத்தையுங்கொண்டு நான் பாடுபட்டுத் தெண்டித்ததன் பின்பு இரகசியங்கலடங்கலையும் நான் விளக்குகிறவனானேன். அந்தரங்கச் செய்திகளை அறிகிறவனானேன். சில வேளைகளில் நான் பேசுவேன். ஆனால் பேச்சானது என்னிலிருந்தவல்லவென்று நான் உணருகிற நிலைமையில் என்றாலும், பேச்சு என்னிலிருந்து வெளிவரும். பேசுகிறவன் நானல்லன். எனது பேச்சுக்கள் சிலது கொண்டு நானே ஆச்சர்யம் அடைகிறவனானேன். சில வேளைகளில் எனது முன்னோர்களாற் பேசும்படி ஏவப்பட்டு, அல்லாஹ்வினால் உத்தரவு கொடுக்கப்படுகிறேன். (இல்ஹாம் செய்யப்படுகிறேன்.) சில சொற்கள் அல்லாஹ்வினின்று வரும் (வாரிதாத்) உத்தரவு கொண்டேயொழிய என் வாயிலிருந்து வெளியாகிறதில்லை.

வஸ்துக்களின் உள்ளமைகள், அதன் அந்தரங்க அம்சங்கள் உடைய அறிவுகளும், தத்துவ பூராய விளக்கங்களும், மலைகளின் ஊற்றுக்களிலிருந்து தண்ணீர் ஊறிக் கிளம்புகிறது போன்று, எனது இருதயத்தின் பகுதிகளிலிருந்து ஊறிக்கிளம்புகிறதாகிறது.

வேறு, பேதம் எனும் திரை மலைகளெல்லாம் இடித்துத் தள்ளப்பட்டன. அதற்குப் பகரமாக ஒளித்திரைகளிடப்பட்டன. அகில மடங்கலும் எனக்குக் காட்டப்பட்டது. எனது பாட்டனார் முஸ்தபா (ஸல்) அவர்களின் வரிசையினால் அதன் அறிவுகள் எனக்குக் கொடுக்கப்பட்டன. உள்ளிலும், வெளியிலும் நான் எங்கு திரும்பினும் எனக்கு மரியாதை கொடுக்கப்பட்டது. வானங்களும் பூமியும் என் கருமத்திற்கு வழிப்பட்டு வந்தன. வருசையையும் சிறப்பையும் பெறுகிறதற்காக முன்னோர் பின்னோர்களில் சத்தியத்தையும் விலாயத்தையும் உடைய மகான்களை அடைந்து கொண்டேன். எந்த விஷயம் பற்றியும் ஆலோசிக்கமாட்டேன். அது நடுப்பகற் சூரியன் போல் வந்தொழிய, யதார்த்தத்துடனே சந்தேகம் எதுவும் தரிக்காது. பேசுவேன்

எனது பேச்சினிடையே என் தரம், தகுதி கொண்டுள்ள சைக்கினைகள் வரும். நான் சிலவிஷயங்களைப் பேசும்படி உத்தரவு கொடுக்கப்படுவேன். ஷரீஅத்தினுடைய கடிவாளக் கயிறும் வெட்கமும் என்னை விலக்கும், என் நாவில் ஒருவேளை எனது பாட்டனார் முஸ்தபா (ஸல்) அவர்கள் பேசுவார்கள். இன்னொரு வேளையில் எனது பாட்டனாராகிய குருபிரான் மஹ்பூபு ஸுப்ஹானி (றலி) அவர்கள் பேசுவார்கள். பிறிதொரு வேளையில் எனது குருவும் ஆசானுமான இப்னு அறபி (றலி) அவர்கள் பேசுவார்கள். மற்ற வேளைகளில் மறைந்த உலகிலுள்ள எனது ஷைகுமார்கள் பேசுவார்கள். ஒரு வேளையில் இவர்களடங்கலுமே மறைந்து விடுவர். அப்பொழுது யாவராலும் நாடப்படுகிற தனியவனான ஹக்கைக் கொண்டு தனிப்பேன். சில வேளைகளில் இந்தக் காட்சிகளை தரிசிக்கிறதைவிட்டு கணப் பொழுதும் எனக்கு ஓய்வு இருக்காது. இந்த ஒழுங்கும், நிலைமையும் ஹிஜ்ரா 1358, றபீஉல் ஆகிர் பிறை 27, வியாழன் இரவை நான் அடைகிற வரை நடந்து வந்தன.

நான் ஒரு கனவு கண்டேன். நானே முளிப்பிற்கும் உறக்கத்திற்கும் மத்தியிலிருந்தேன். நன்மாராயம் கூறும் மலக்குகளால் (அமரர்களால்) சூழப்பட்ட ஒளியினாலான சில மனிதர்கள் என்னிடம் வந்தார்கள். தஸ்னீம் எனும் அருவிகளவில் (சுவன அருவிகளில் சில( அழைத்துச் சென்றார்கள். என்னை அதில் அமிழ்த்தி, அதிலிருந்து புகட்டி என்னைச் சுத்தி செய்து பரிசுத்தப் படுத்தினார்கள். பின்பு என்னை ரப் ரபுல் அக்லா (பசும் பரமதானி) அளவிலும் அதிலிருந்து மிக உயர்ந்த, பரிசுத்த, சந்நிதானத்தளவிலும் உயர்த்திச் சென்றார்கள்.

எனது உள்ளமைகளின் கண்கள் அடங்கலினாலும் என் தன்னின் எல்லாச் செவிகளினாலும் இந்த என் காலத்திலே ஒரு கண்ணும் காணாததைக் கண்டேன். ஒரு காதும் கேளாததைக் கேட்டேன். ஒரு ரூஹும் அனுபவியாததை அனுபவித்தேன். எனது இறைவனின் அதிகமான செல்வங்களிலிருந்து நானறிந்தது வரை.

என்னில் நடந்த இவற்றிற்கு ஆச்சரியமே; எனது புலன்கள், உறுப்புக்கள் அடங்கலும் எனது ரூஹும் அடைந்த அபூர்வ இன்பத்திற்கு என்னதான் சொல்வேன். வஸ்துக்களைப் போலல்லாத ஒரு வஸ்தாயிருக்கிற இரகசியத்திலே எனது சர்வாங்கமும் அழிந்து அதே சிர்ரில் நான் ஜீவ சக்தி பெற்றுத் தரித்தேன். எனவே நானோ அது கொண்டு கேட்கிற ஹக்கின் காதாகவும், அது கொண்டு பார்க்கிற ஹக்கின் கண்ணாகவும் அது கொண்டே பேசுகிற ஹக்கின் நாவாகவும் ஆனேன். அருந்துகிறவர்களுக்கு இன்பமான மதுவிலிருந்து புகட்டப்பட்டேன். காலத்தின் இமாமே என அழைக்கப்பட்டேன். கெட்டுப் போகாத தண்ணீரிலிருந்தும்

இன்பம் பேதமாகாத பாலிலிருந்தும் புகட்டப்பட்டேன். காலத்தின் தைரிய சித்தனே என்று அழைக்கப்பட்டேன். இஞ்சியின் ருசியும் கற்பூரப் பரிமளமும் கொண்டு கலக்கப்பட்ட சுத்தமான பானத்தைப் புகட்டப்பட்டேன். அதிலிருந்து மூன்று அருந்தல்கள் அருந்தியதும் பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதியே! என்று அழைக்கப்பட்டேன். உம்மைத் துயர்ந்து உம்மை அழைத்தவன் ஐயம் பெற்றான். உம்மைப் பகைத்தவன் பேறு கெட்டான்.

எமது பாதுகாப்பு, கருமம் அடங்கலுங் கொண்டு திரும்பும், எனது தத்துவம், சக்தி கொண்டு ஆவன செய்யும். (நிர்வகியும்) எனது சர்வாங்கத்தின் பரிமளத்தை எனது சர்வாங்கமுங் கொண்டு நுகர்ந்து ரசித்தேன். மேற்கூறிய பரமதானியளவில் மீண்டேன். மலக்குகளுடனே இருந்த ஒளி மனிதர்களைக் கண்டேன். ஏழு வானங்களுக்கு மேலே இந்த வியக்திக்கு எவ்வளவோ சங்கை, மரியாதைகள் இருந்தன. அந்த மனிதர்களுடனே ஸித்ரத்துல் முன்தஹா (கடைசி விருஷம்) அளவில் மீண்டேன்.

எனது பாட்டனார் முஸ்தபா(ஸல்) அவர்களை, பரிசுத்த சந்நிதானம் எனும் ஹலரத்துல் குத்ஸி–லே நான் கண்டவிதமல்லாத வேறு விதத்திலே கண்டேன். எனக்குச் சோபனம் கூறி அவர்களின் பரிவட்டத்தை அணிவித்து, மகனே! எனது கண் குளிர்ச்சியே! எனது அனந்தக்காரனே! என்றழைத்து, நீர் ஏவப்படுகிறதை நன்றாய்க் கூறும். எனது உதவி கொண்டு நிர்வாகம் புரியும் எனக்கூறி என் நேத்திரங்கள் மத்தியில் முத்தமிட்டார்கள். நான் பைத்துல் மஃமூர் அளவில் வந்தேன். அதன் மிஹ்ராபிலே என் பாட்டனார், மஹ்பூப் ஸுப்ஹானி அவர்களை ஸித்ரஹ்வில் நான் கண்ட விதமல்லாத விதத்தில் பார்த்தேன். எனக்குச் சோபனம் கூறி அவர்களின் கில்ஆ பரிவட்டத்தை அணிவித்தார்கள். மைத்துல் மஃமூரிலே அவர்கள் ஏவல் கொண்டு இரண்டு ரக்க அத்துக்கள் தொழுதேன். எனது நேத்திரங்களிடையே முத்தமிட்டு எனக்கு உபதேசித்துக் கூறினார்கள்:–

அருமை மகவே! எமது பிரதிநிதியே! எமது உதவி கொண்டு நிர்வாகம் புரியும் என்று. எனது குருமார்கள் அனைவரையும் அவர்கள் கரங்கள், பாதங்களைத் தொட்டு (முஸாபஹா) ஆலிங்கனம் செய்து கொண்டு சுவர்க்கத்தளவில் திரும்பினேன். அது எனக்கு சோபனம் கூறி கழுத்தைக் கட்டியது. எனது இந்தக் காட்சியிலிருந்து தெளிந்தேன். என்னிலிருந்து எனது பரிமளம் வீசியது. எனது ஸுப்ஹு தொழுகையைத் தொழுதேன். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்குரியன. எனவே என்னினின்றும் இந்த அடையாளம் வருமாறு கூறுகிறது.

# கலிமா விருட்சக் கனிந்த கனிச் சாறு

சங்கைமிகு குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா (ரலி) அவர்களின் கலிமா விருட்சக்கனிந்த கனி நூலிலிருந்து...

■ தலைமைத் தனமுடைய ஹக்கின் கோலத்தின் நிழலிலே நான் மயங்கிப் போயுள்ளேன். ஸஜ்தா (சாஷ்டாங்கம்) செய்யும் முகத்தைக் கொண்டு இரண்டாவது ஒன்றையும் அணுக மாட்டேன்.

ஹக்கில் ஆசை மிக்க இச்சையின் மோகத்தின் மீது, எப்பொழுதுமே என்னைப் பரிசுத்தப்படுத்திக் கொண்டிருக்கிற அத்ன் எனும் சுவர்க்கத்திலே நான் புகுந்திருக்கிறேன்.

பலமான ஒரு தூணளவில் நான் ஒதுங்கியிருக்கிறேன். அதனால், எனது சுபீட்சமுள்ள சீவியத்தில் எனக்கு அச்சமோ கவலையோ இல்லை.

கட்டுக்கடையான தண்ணீரைப் போலல்லாமல் எல்லாப் பகுதிகளிலும் பிரகாசிக்கிற ஒளி எனது இதயத்திலிருந்து ஜ்வலிக்கிறது.

எனது வாயிலிருந்து ஹகீகத், (பரமார்த்த அறிவு) ஷரீஅத், (மார்க்க ஒழுக்க அறிவு) உடைய சமுத்திரம், அதன் முத்துக்களைக் கேட்கிறவனின் செவிக்கு வெளியாக்கியது.

அந்தச் சமுத்திரத்தின் ஆழிய பகுதிகளிலே ஒரே ஈசுவரனிலிருந்து, அறிவு கொண்டு கலந்துள்ள அலைகள் ஒன்றோடொன்று மோதுகின்றன.

■ கிழக்காலும் மேற்காலும் பிரபஞ்சங்கள் எமக்கு வழிப்பட்டன. அங்கு எமது கருமத்தின் பிரதரிசனமே தவிர வேறு ஒன்றும் இருக்கவில்லை.

பெயரும், பெயரிடப்பட்ட பொருளும் நானே. அடையாளமும் காணப்படும் பொருளும் நானே.

வர்ணனையும், வர்ணிக்கப்படு பொருளும் நானே. எனக்கே சுபீட்சங்களும் ஆத்ம வெளிப்பாடும் உரியன.

புகழும் புகழப்படுகிறவனும் நானே. ஆத்ம உலகும் அதன் படைகளும் எனக்குரியன.

திக்ரும் திக்ரு செய்யப்படும் பொருளும் நானே. காப்பாற்றுகிறதும் சேமித்தலும் என்னைக் கொண்டுள்ளன.

அப்துல் காதிர் ஜீலி (றலி) எனது வலதும் பக்ருதீன் எனது இடதுமாவர்.

முன் வந்த அவதாரங்கள் எல்லாம் எனது அவதாரத்தை மெய்ப்பித்தன. எனது ஜ்வலிப்பினால் சந்திரன்கள் பிரகாசித்தன.

வானத்தின் சூரியனும் பூரண சந்திரனும் எனது முஹம்மதின் (ஸல்) ஜோதியையே பற்றியிருக்கின்றன.

மேற்கும் என்னைக் கொண்டே. கிழக்கும் என்னைக் கொண்டே. மேலும் என்னைக் கொண்டே. கீழும் என்னைக் கொண்டே.

உடலும் என்னைக் கொண்டே. அதைச் சேர்ந்து நிற்கும் அணுவும் என்னைக் கொண்டே. உயிரும் என்னைக் கொண்டே. அதைப் பற்றிய கலப்பற்ற தன்மையும் என்னைக் கொண்டே.

அடங்கலும் என்னைக் கொண்டொழிய இல்லை. என்னைக் கொண்டுள்ள அடங்கலும் என்னாலேயே ஸ்திரமாயிருக்கின்றன.

---

■ சர்வாதிகாரியான ஹக்கின் அர்ஷின் (சிங்காசனம்) திரைகடவளவில் உயர்த்தப்பட்டேன். அங்கு சூழ்ந்திருந்த (அமரர்கள்) மலக்குகள் லிஸானுல் ஹக் சத்தியத்தின் நாவென்று என்னை அழைத்தார்கள்.

ஹக்கை, ஒப்பற்றதாய் எனது மூலாதாரத் தோன்று துறைகளில் நான் காண்கிற வரை அர்ஷின் திரைகளைத் தாண்டினேன்,

இந்த உம்மத்தின் (சமூகம்) குத்புகளினுடைய ரூஹுகளின் மீது என்னை எடுத்துக் காட்டப்பட்டது. அதனால் அவர்கள் நம்மை புர்ஹானு தீனில்லாஹ் (அல்லாஹ்வின் மார்க்க ஆதாரம்) என்று அழைத்தார்கள்.

றஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய மடியிலும் முதுகிலும், அவர்களது நட்சத்திரத்தின் ஜோதியான முஹிய்யிதீன் (றலி) அவர்கள் முதுகிலும் வளர்ந்தேன்.

நானே இப்பொழுதைய காதிரீயாவேன். அவர்கள் எனது பாட்டனாரும் எனது தோன்று துறையுமாவர். இதோ வெளியாகி இருக்கிறது அவர்கள் சமூகத்தின் கருமமேயன்றி வேறல்ல.

---

■ எனது குருபிரானும் எனக்கு உணர்ச்சியை வருத்தியவர்களுமான இப்னு அறபி (றலி) அவர்கள் (என் கனவிலே) என்னுடன் சம்பாஷித்து என் வாயில் உமிழ்ந்து உபகாரம் செய்ததால் (தேவையை அடைந்தேன்)

அவர்கள் புத்தகத்தின் வரிகளிலிருந்து அறிவுகளை எடுத்துக் கொள்ளும்படி எனக்குக் கூறி தங்கள் வலக்கரங் கொண்டு என் நெஞ்சைத் தடவியதால் (சம்பூர்ணமடைந்தேன்)

எண்ணற்ற அவர்களின் கொடையினால் வஹ்ததத்துல் உஜூதை (உள்ளமை ஒன்று, சர்வமும் ஏகம்) நான் மொழிகிறது கொண்டு எத்தனையோ நாஸ்திக நாக்கள் மழுங்கி விட்டன.

நானே சிறப்பு, மேன்மை, கொண்டு பிரபலமான யாஸீனாவேன். இன்னும் ஹக்கின் திரைகளிலே அபூர்வமாய் மறைத்து வைக்கப்பட்ட தனி முத்துமாவேன்.

## ரிஸாலா கௌதிய்யா மகிமை!

■ திருமுல்லைவாசல், மேலப்பள்ளி வாசலிலே ஹிஜ்ரா 1358 ஜமாதுல் அவ்வல் பிறை 2, திங்கட்கிழமை மக்ரிபுக்கும் இஷாவுக்குமிடையில் எனது பாட்டனார் மஹ்பூப் ஸுப்ஹானி (றலி) அவர்களின் பிரசன்னத்தைப் பெற்றேன். துஹ்பத்துஸ் ஸூபிய்யா, ரிஸாலா கௌதிய்யா, என்ற பெயர்களுடைய அவர்களின் அரிய இரு கிரந்தங்களை எனக்குக் கொடுத்து நானும் என்னைத் துயர்கிறவர்களும் அவற்றைக் கொண்டு பிரயோசனம் பெறும்படிக் கூறினார்கள். அல்லாஹ் அவர்களைப் பொருந்துவானாக. எல்லாப்புகழும் அல்லாஹ்வுக் குரியன.

## ராதிபதுல் ஹக்கிய்யதுல் காதிரிய்யா மகிமை!

■ திருச்சியில் எனது நண்பர் மர்ஹூம் அல்ஹாபிஸ் ஸூபி, நெய்னா முஹம்மது சாஹிப் அவர்கள் வீட்டிலே ஹிஜ்ரா 1358, ஜமாதுல் ஆகிர், பிறை 20, செவ்வாய்க்கிழமை காலை எனது மனாமில், நான், உலமாக்கள், ஸூபியாக்களுடைய கூட்டத்திலே, உபதேச சபையிலே, என்னைத் துயரும்படியும், என்னைப் பிரியம் வைக்கும்படியும் உபதேசித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது எனது பாட்டனார், மஹ்பூப் ஸுப்ஹானி (றலி) அவர்கள் பிரசன்னமாகி, ஒவ்வொரு அறபி மாதமும் 14-ம் இரவிலே, திக்ரு உபதேசத்திற்குரிய சபையை எனது சக்திக்குத் தக்கபடி நடத்துமாறு சொல்லி, செல்வங்கள், நலன்கள், சிலது கொண்டு எனக்கு நற்சொற் கூறினார்கள். அல்லாஹ் அவர்கள் இரகசியத்தைப் பரிசுத்தப்படுத்தி அவர்கள் ஆத்மாவைச் சிறப்பிப்பானாக. அவனின் திருவருள் மீது எல்லாப் புகழும் அவனுக்கே உரியது.

# வீணாகும் உணவுகள்

-ரகுமத் ராஜகுமாரன்-

உலகளாவிய அறிக்கையின்படி, ஒவ்வொரு ஆண்டும் 900 மில்லியன் டன்களுக்கும் அதிகமான உணவு தூக்கி எறியப்படுகிறது என்றால் உங்கள் மனம் வேதனைப்படுகிறதா ?

கடைகள், வீடுகள் மற்றும் உணவகங்களில் நுகர்வோருக்குக் கிடைக்கும் உணவுகளில் 17% நேரடியாக குப்பை தொட்டிக்குச் செல்கிறது என்பதை ஐ.நா. சுற்றுச்சூழல் திட்டத்தின் வீணாகும் உணவுகள் பற்றிய குறியீடு வெளிப்படுத்தியது. அதில் 60% உங்கள் வீட்டிலும் எங்கள் வீட்டிலும் நிகழ்கிறது !

உலகளாவிய உணவு விரயம் தொடர்பான அறிக்கையை ஐநா வெளியிட்டுள்ளது. 2022-ம் ஆண்டில் 5-ல் 1 பங்கு அளவில் உணவு விரயமானதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீடுகளில் 63 கோடி டன், உணவகங்களில் 29 கோடி டன், சில்லறைக் கடைகளில் 13 கோடி டன் என உலக அளவில் 105 கோடி டன் உணவு விரயம் செய்யப்படுகிறது. வீடுகளில் ஒரு நாளைக்கு 100 கோடி உணவுகள் வீணாக்கப்படுகின்றன என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, உலக அளவில் வீடுகளில் ஒரு நாள் வீணாகும் உணவைக் கொண்டு 100 கோடி மக்களின் பசியைத் தீர்க்க முடியும்! குறிப்பாக, அதிக வெப்ப நிலை நிலவும் நாடுகளில் உள்ள வீடுகளில் தனிநபர் உணவு விரயம் அதிகமாக உள்ளது. அதிக வெப்ப நிலையால், உணவை சேமித்து வைப்பது அங்கு சவாலாக உள்ளதால் வீண்விரயம் அதிகம் நிகழ்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது

**23 மில்லியன் உணவு ட்ரக்குகள் :-**

இந்த வீணாகும் உணவு குறித்த அறிக்கை உலகளாவிய பிரச்சினையை முன்னிலைப் படுத்தியுள்ளது. இது முன்னர் மதிப்பிடப்பட்டதை விட மிகப் பெரியது என்று ராப் அமைப்பைச்சேர்ந்த ரிச்சர்ட் ஸ்வன்னெல் பி.பி.சி. நியூஸிடம் தெரிவித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் வீணாகும் 923 மில்லியன் டன் உணவு, 40 டன் சரக்கை 23 மில்லியன் ட்ரக்குகளை நிரப்பும். அதாவது இந்த ட்ரக்குகளை ஒன்றுக்கொன்று தொடும்படி நிறுத்தினால், அது பூமியை ஏழு முறை வட்டமிடப் போதுமானது.

இது குறித்து ஐநாவின் சுற்றுச்சூழல் திட்டப் பிரிவின் செயல் இயக்குநர் ஆண்டர்சன் கூறுகையில், உணவு விரயம் என்பது உலக அளவில் நிகழ்ந்து வரும் துயரமான விஷயம். லட்சக்கணக்கான மக்கள் உணவின்றிக் பசியில் வாடும் சூழலில், உணவுகள் எந்தக் கணக்குமின்றி வீணாக்கப்படுகின்றன. சுற்றுச்சூழல் சார்ந்தும் இது பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதில் ஆறுதலான விஷயம், நாடுகள் நினைத்தால் உணவு விரயத்தை கட்டுப்படுத்த முடியும். எனவே, உலக நாடுகள் உணவு விரயத்தைக் கட்டுப்படுத்த இலக்கு நிர்ணயித்து செயல்பட வேண்டியது அவசியம் என்று தெரிவித்துள்ளார்.

**பொதுமுடக்கத்தின் ஆச்சரியமான விளைவு :-**

கோவிட் 19 பொதுமுடக்கம், தெரிந்தே உணவை வீணாக்குதலை எப்படித் தடுக்கமுடியும் என்பதற்கான பதிலையும் ஆச்சரியகரமாக வெளிப்படுத்தியது.

அதாவது பொது முடக்கத்தின்போது, திட்டமிடல், கவனமாக சேமித்தல் மற்றும் தொகுதிகளாக சமைத்தல் ஆகியவை காரணமாக 2019 உடன் ஒப்பிடும்போது மக்கள் உணவை வீணாக்குவது 22 % குறைந்தது என்று ராப் தெரிவிக்கிறது.

வீடுகளில் முடங்கிப்போன காரணத்தால், தொகுதிகளாக சமைத்தல் மற்றும் உணவு திட்டமிடல் போன்ற நடத்தைகள் அதிகரித்துள்ளன என்று அந்த தொண்டு நிறுவனம் தெரிவித்துள்ளது. ஆனால் பொதுமுடக்கத்திலிருந்து நாம் வெளியே வரும்போது வீணாகும் உணவின் அளவு மீண்டும் உயரக்கூடும் என்று சமீப நிகழ்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இதிலிருந்து கொரோனா போன்ற பொது முடக்கம் நமக்கு தெரிவிப்பது இயற்கை ஏற்படுத்தும் பஞ்சம் போன்றவை மனித குலத்திற்கு பெரும் சோதனையாக இருந்தாலும் அவைகள் உலக மக்களின் அலட்சியப் போக்கிலிருந்து கண்டித்து நல்வழிப்படுத்த ஏற்படுத்தப்பட்டது போல இருக்கிறது என்று உணவு ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இன்று உணவை வீணாடித்தால், நாளைய பஞ்சம் உங்களை பட்டினி போடும் – இயற்கை கூட given take பாலிஸியை நன்றாகவே செயல்படுத்துகிறது என்கின்றனர்.

***(நம்பிக்கையாளர்களே!) பயம், பசி, மேலும் பொருள்கள், உயிர்கள், கனிவர்க்கங்கள் ஆகியவைகளைக் கொண்டு நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம். (நபியே! இச்சோதனைகளால் ஏற்படும் கஷ்டங்களைச்) சகித்துக் கொண்டிருப்பவர்களுக்கு நீங்கள் நற்செய்தி கூறுங்கள். (அல்குர்ஆன் : 2:155)***

# மதீனாவின் மாண்பு

**சொர்க்கத்துப் பூங்காக்களில் ஒரு பூங்காவனமாகிய புனிதம் பூக்கும் மாமதீனாவின் சிறப்புக்கள்.**

மதீனா என்பதற்கு பட்டணம், நகரம் என்பது பொருளாகும். இது ஸவூதி அரேபியாவின் மேற்கு மாநிலத்தில் (பழை ஹிஜாஸ்) மாநிலத்தில் யான்பு துறைமுகத்திலிருந்து கிழக்கே 215 கிலோ மீட்டர் தொலைவிலும், மக்காவிற்கு வடக்கே 400 கிலோ மீட்டர் தொலைவிலும், ஜித்தாவிற்கு வடக்கே 400 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

துவக்கத்தில் யஸ்ரிப் என்று அழைக்கப்பட்டு வந்த இந்நகரம் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் பயணம் மேற்கொண்டு குடியேறிய பின்னர் நபியின் பட்டணம் என்ற பொருளில் மதீனத்துந் நபி (நபியின் நகரம்) என்றும் ஒளிபொருந்திய நகரம் என்ற பொருளில் மதீனா முனவ்வரா என்றும் அழைக்கப்பட்டு பின்னர் சுருக்கமாக மக்களால் மதீனா என்று அழைக்கப்படுகிறது.

**மதீனாவின் சிறப்புகள்**

நிச்சயமாக இப்ராஹீம் நபி (அலைஹிஸ் ஸலாம்) அவர்கள் மக்கமா நகரத்தை சங்கைப்படுத்தி புனிதம் மிகுந்ததாக ஆக்கினார்கள். நான் மதீனமா நகரத்தை சங்கைப்படுத்தி புனிதமாக்கியிருக்கிறேன். என நபிகள் நாயகம் ஸல்லலாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். *நூல் : முஸ்லிம், இப்னு மாஜா*

அபூ ஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு) அறிவித்தார்கள், மதீனாவின் இரண்டு மலைகளுக்கு இடைப்பட்ட பகுதி என் நாவினால் (என் வாயிலாக) புனிதமானதாக ஆக்கப்பட்டுவிட்டது! என்று இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். பனூ ஹாரிஸா குலத்தினரிடம் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சென்று, பனூ ஹாரிஸா குலத்தினரிடம்! நீங்கள் ஹரம் எல்லைக்கு வெளியே இருக்கிறீர்கள்! என்றார்கள். பின்னர் திரும்பிப் பார்த்துவிட்டு. இல்லை! நீங்கள் ஹரம் எல்லைக்குள்தான் இருக்கிறீர்கள்! என்றார்கள். *ஸஹீஹ் புகாரி 1869*

**நபிகள் நாயகம் ஸல்லலாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நேசித்த புனித பூமியாகும்**

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எந்தப் பயணத்திலிருந்து திரும்பும்போது மதீனாவின் சுவர்களை கண்டுவிட்டால் விரைந்து வாகனத்தை ஓட்டுவார்கள். ஏனெனில் மதீனாவின் மீது அவர்கள் கொண்டிருந்த அன்பே காரணமாகும்.

அபூ ஹுமைத் (ரலியல்லாஹு அன்ஹு) அறிவித்தார்கள், நாங்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடன் தபூக்கிலிருந்து (யுத்தம் முடிந்து) திரும்பினோம். மதீனாவை நெருங்கியதும். இது தாபா! (நலம் மிக்கது! தூய்மையானது) என்று இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். *ஸஹீஹ் புகாரி 1872*

அனஸ் (ரலியல்லாஹுஅன்ஹு) அறிவித்தார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பயணத்திலிருந்து ஊர் திரும்பும் போது மதீனாவில் உள்ள வீடுகளி)ன் சுவர்களைக் கண்டதும் தம் வாகனத்தை விரைந்து செலுத்துவார்கள். வாகனத்தில் மேல் அவர்கள் அமர்ந்திருந்தால் அன்புடன் அதைத் தட்டிக் கொடுப்பார்கள். *ஸஹீஹ் புகாரி – 1886*

ஈமான் எனும் இறை நம்பிக்கை மதீனாவில் அபயம் பெறும் புனித பூமியாகும்.

இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: பாம்பு தன் புற்றில் (சென்று) அபயம் பெறுவது போல் ஈமான் எனும் இறை நம்பிக்கை மதீனாவில் அபயம் பெறும்! என அபூ ஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு) அறிவித்தார்கள். *(ஸஹீஹ் புகாரி 1876)*

கொல்லனின் துருத்தியாகிறது இரும்பின் துருவை நீக்கி சுத்தம் செய்வது போல மதீனாவாகிறது மனிதர்களை (அகத்துருவை நீக்கி) பரிசுத்தப்படுத்தி விடும் என நபிகள் நாயகம் ஸல்லலாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

*நூல் : மிஷ்காத் 240*

**பரக்கத் செய்யப்பட்ட புனித பூமியாகும்**

இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: இறைவா! மக்காவில் நீ ஏற்படுத்திய பரக்கத்தைப் போல் இரண்டு மடங்கை மதீனாவில் ஏற்படுத்துவாயாக! என ஹழ்ரத் அனஸ் (ரலியல்லாஹு அன்ஹு) அறிவித்தார்கள்.

*(ஸஹீஹ் புகாரி 1885, முஸ்லிம், மிஷ்காத் 240)*

குழப்பமான காலத்திலும் கியாமத்நெருக்கத்திலும் அடைக்கலமாகுவதற்கு மதீனாவே சிறந்த பூமியாகும்

இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். யமன் வெற்றி கொள்ளப்படும். உடனே, ஒரு கூட்டத்தினர் ஒட்டகங்களை ஓட்டிக் கொண்டு, தம் குடும்பத்தினரையும் தம் கட்டுப்பாட்டிற்குள் உள்ளவர்களையும் அழைத்துக் கொண்டு (யமன் நாட்டிற்குச்) செல்வார்கள்! ஆயினும், மதீனாவே அவர்களுக்குச் சிறந்தது! இதை அவர்கள் அறிந்திருக்கக் கூடாதா? பின்னர் ஷாம்வெற்றி கொள்ளப்படும். உடனே, ஒரு கூட்டத்தினர் ஒட்டகங்களை ஓட்டிக் கொண்டு,தம் குடும்பத்தினரையும் தம் கட்டுப்பாட்டிற்குள் உள்ளவர்களையும் அழைத்துக் கொண்டு அங்கே செல்வார்கள்; ஆயினும், மதீனாவே அவர்களுக்குச் சிறந்தது! இதை அவர்கள் அறிந்திருக்கக் கூடாதா? பின்னர் இராக் வெற்றி கொள்ளப்படும்; உடனே, ஒரு கூட்டத்தினர் ஒட்டகங்களை ஓட்டிக்கொண்டு, தம் குடும்பத்தினரையும் தம் கட்டுப்பாட்டிற்குள் உள்ளவர்களையும் அழைத்துக் கொண்டு அங்கே செல்வார்கள்! ஆயினும், மதீனாவே அவர்களுக்குச் சிறந்தது! இதை அவர்கள் அறிந்திருக்கக் கூடாதா? என சுப்யான் (ரலியல்லாஹு அன்ஹு) அறிவித்தார்கள் (ஸஹீஹ் புகாரி 1875)

**தஜ்ஜாலை விட்டும் பாதுகாக்கப்பட்ட புனித பூமியாகும்**

இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: மதீனாவின் வாசல்களில் வானவர்கள் இருப்பர்! மதீனாவிற்குள் (பிளேக் போன்ற) கொள்ளை நோயும் தஜ்ஜாலும் நுழைய முடியாது!

ஹழ்ரத் அபூ ஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு) ஸஹீஹ் புகாரி 1880

இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: தஜ்ஜாலைப் பற்றிய அச்சம் மதீனாவுக்குள் நுழையாது! அன்றைய தினம் மதீனாவுக்கு ஏழு வாசல்கள் இருக்கும்! ஒவ்வொரு வாசலிலும் இரண்டு வானவர்கள் இருப்பார்கள்! *ஹழ்ரத் அபூ பக்ர் (ரலியல்லாஹு அன்ஹு) ஸஹீஹ் புகாரி – 1878*

மதீனாவின் தெருக்களில் மலக்குகள் நடமாடுவார்கள். அங்கு காலராவும் தஜ்ஜாலும் நுழைய முடியாது. இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

தஜ்ஜால் (மதீனாவை நோக்கி) வருவான்; மதீனாவின் வாசல்களில் நுழைவதுஅவனுக்குத் தடுக்கப்பட்டிருக்கிறது; எனவே, (மதீனாவுக்கு வெளியே), மதீனாவின் உவர் நிலத்தில் அவன் தங்குவான்; அவனை நோக்கி மக்களில் சிறந்த

ஒருவர்அன்று புறப்படுவார்; அவர் அவனிடம், இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் (அடையாளம்) சொல்லிய தஜ்ஜால் நீதான் என்று உறுதியாகக் கூறுகிறேன்! என்பார். அப்போது தஜ்ஜால் (மக்களை நோக்கி), நான் இவனைக் கொன்று, பிறகு உயிர்ப்பித்தால் (என்) விஷயத்தில் நீங்கள் சந்தேகம் கொள்வீர்களா? என்று கேட்பான். மக்கள் கொள்ள மாட்டோம்! என்பார்கள். உடனே, அவன் அவரைக் கொன்று, பின்னர் உயிர்ப்பிப்பான். அப்போது, அந்த நல்ல மனிதர் உயிர்ப்பிக்கப்பட்டதும், அல்லாஹ்வின் மீது ஆணையாக! இன்றைய தினத்தை விடத் தெளிவாக உன்னைப் பற்றி நான் (இதற்கு முன்) ஒருபோதும் அறிந்திருக்கவில்லை!என்று கூறுவார். தஜ்ஜால் நான் இவரைக் கொல்வேன்! என்பான். ஆனால், அவனால் அவரைக் கொல்ல முடியாது! என அபூ ஸயீத் (ரலியல்லாஹு அன்ஹு) அறிவித்தார்கள்.

---

*சுவர்க்கம் தேடுகிறது...*

(1) திருக்குர்ஆனை ஓதுபவர்

(2) தேவையற்ற பேச்சை பேசாமல் தன் நாவை பேணுபவர்

(3) பசித்தவருக்கு உணவளிப்பவர்

(4) ரமளான் மாதத்தில் நோன்பு நோற்பவர். – (நூல் மிஷ்காத்)

***சுவர்க்கம் மூவரைக் காண ஆசைப்படுகிறது...***

(1) அலீ இப்னு அபீதாலிப்

(2) அம்மார் இப்னு யாஸீர்

(3) ஸல்மான் அல்ஃபாரிஸி– நபி (ஸல்) அவர்கள் நூல் : திர்மிதி மிஷ்காத் 578

***மனிதனுக்குப் போதும்...***

(1) எவர் ஒருவர் நண்பரைத் தேடி அலைகிறாரோ அவருக்கு ***அல்லாஹ்*** போதுமானவன்.

(2) எவர் ஒரு வழிகாட்டியைத் தேடி அலைகிறாரோ அவருக்கு ***குர்ஆன்*** போதும்.

(3) எவர் ஒரு உபதேசியை தேடி அலைகிறாரோ அவருக்கு ***மரணம்*** போதும்.

(4) எவர் பணத்தைத் தேடி அலைகிறாரோ அவருக்கு ***போதுமென்ற மனமே*** போதும்.

(5) எவர் இந்த நான்கிலும் படிப்பினை பெறவில்லையோ அவருக்கு ***நரகம்*** போதும்.

– நபி (ஸல்) அவர்கள்.

# திருச்சியில்

## உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஒன்பதாம் மாநாடு

## நாள் : மே. 9.10. 11. 2025 தேதிகளில் நடைபெறவுள்ளது.

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்) இன்ஷா அல்லாஹ் திருச்சியில் நடைபெறவுள்ள மாநாட்டில் நமது சங்கைக்குரிய ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா வாப்பா நாயகம் பெயரில், "**ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா வாப்பா நாயகம் விருது** " வழங்கப்படவேண்டி இஸ்லாமிய இலக்கியக்கழகம் கேட்டுக்கொண்டதற்கு நமது சங்கைக்குரிய ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா வாப்பா நாயகம் அவர்களால் மனமுவந்து ஒப்புதல் அளிக்கப்பட்டு இவ்விருது இஸ்லாமிய இலக்கியக்கழகத்தாரால் ஒரு தமிழ் இலக்கியவாதிக்கு வழங்கப்பட இருக்கின்ற இந்நற் செய்தியை அன்புடன் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

*அன்புடன், எஸ். ஷர்புத்தீன –அதிரை*

---

பேரன்புடையீர், இறையருள் தங்கள் மீது நிறைவதாக...இதனையே நாங்கள் நேரிடையாகத் தங்களுக்கு விடுத்த அழைப்பாகக் கொண்டு அவசியம் மாநாட்டில் கலந்து சிறப்பிக்க அழைக்கிறோம். ஆய்வுக் கட்டுரைகள் அனுப்பி உதவிய

அனைவருக்கும் மிக்க நன்றி... மாநாட்டுச் சிறப்பு மலருக்கான கட்டுரைகள்,கவிதைகள் ஆகியவற்றை உடனடியாக அனுப்பி உதவுக. இலக்கியப் படைப்பாளர்கள், புரவலர்கள், சமுதாயம் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் யார்? எவர்? நூலுக்கான தங்களது விவரக் குறிப்புகளையும் நேரடியாக islamicliteraturesociety@gmail.com எனும் மின் அஞ்சல் முகவரிக்கு உடனடியாக அனுப்பி ஆவணப்படுத்திக் கொள்ளவும் பேராளர்களாகப் பதிவு செய்து கொள்ளவும் அன்புடன் அழைக்கிறோம்...

வெளிநாடுகளில் இருந்து கலந்துகொள்ளும் பேராளர்களுக்குப் பதிவுக் கட்டணம் இல்லை.

தமிழ்நாட்டுப் பேராளர்கள் பதிவுக் கட்டணம்

ரூபாய் ஆயிரம் மட்டும்.

யார்? எவர்? பதிவுக் கட்டணம் இந்திய ரூபாய் 300/–

அறிவிப்பு மடலில் / பதிவுத் தாளில் உள்ள வங்கிக் கணக்குக்கு அனுப்பி வைக்கலாம்

**இலக்கியத்தால் இணைவோம். வாருங்கள் காத்திருக்கிறோம்.**

## இஸ்லாமிய
## இலக்கியக் கழகம்

# உலக
# இஸ்லாமியத்
# தமிழ் இலக்கிய
# ஒன்பதாம் மாநாடு

**இணைப்பே இலக்கியம்**

நிகழிடம்
எம்.ஐ.இ.டி. பொறியியல் கல்லூரி
திருச்சி



Registered with R.N.I. No. TNTAM / 2009 / 27865
Postal Registration No. DDL / 08 / 2024 - 2026
Date of Publication on 7th, Posted on 10th, of Every Month at H.P.O. Dindigul

## தர்ஜுமத்துல் குர்ஆன் – மஅத் தஃப்ஸீரி – வத்தப்ஸீர்

குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் தெளிவான தமிழ் மொழி பெயர்ப்பு – விளக்க உரை – தெளிவுரை – ஆன்மீக விளக்கக் குறிப்பு களுடன் கூடியது. தமிழில் இதுவரை வெளி வராத அற்புத படைப்பு. விலை ரூ.100 – (கொரியர் செலவு தனி)




## அரபு – தமிழ் (காமூஸ்) அகராதி

குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (ரலி) அவர்களின் கை வண்ணத்தில் உருவாகி, குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் அவர்கள் புதிய சொற்கள் இணைத்துப் பதிப்பித்த அருமையான கலைக் கருவூலம். அறபுக் கல்லூரி ஆசிரியர்கள் – மாணவர்கள் – ஆலிம் பெருமக்கள் அனைவரது கைகளிலும் தவழ வேண்டிய அற்புதமான அகராதி. இரண்டு பாகங்கள் விலை ரூ.500 (கொரியர் செலவு தனி)




தொடர்புக்கு : 98940 94490
99445 76165

Owned by Awniyya World Peace Trust Published by
J. Mohamed Rahmathulla B.A.B.Com.,Fakira Complex, 74, Palani Road,
Dindigul - 624001.Printer : R.VijayalakshmiPrinted at
Sri Agni Amman Printers,52, Palani Road, Near Sakthi Theatre, Dindigul - 624001.
Editor S. Hussain Muhammad Manbayee